வெளியீடு 12-9-2001 Issued 12-9-2001

270
2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

DIGITIZED

வியாழக்கிழமை, மே 24, 2001 – தொகுதி 1 – எண் 2

**Thursday the 24th May, 2001 – Volume 1 – No. 2**

ட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

lative Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

V.24, 3/P01.
P01.1.2
222385

[Price Rs. 3.00

–5–2001
290/2002

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அறிவிப்பு–** | |
| உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள், உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் | 17 |
| **2. பேரவைத் தலைவர் தேர்தல்** | 18 - 19 |
| **3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்** | 20 |
| **4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்–** | 20 - 59 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 20 - 23 |
| *பேராசிரியர் க. அன்பழகன் | 23 - 26 |
| திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் | 27 - 31 |
| திரு. ஜி.கே. மணி | 31 - 35 |
| திரு. எச்.எம். ராஜு | 35 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 36 - 37 |
| திரு. ஜி. பழனிசாமி | 37 - 39 |
| திரு. எச். ராஜா | 39 - 40 |
| திரு. ஆஸ்டின் | 40 - 43 |
| *திரு. லா. சந்தானம் | 43 - 45 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்**—*தொடர்ச்சி* | |
| திரு. மு. அப்பாவு | 46 |
| மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா | 47 - 51 |
| மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் | 51 - 52 |
| மாண்புமிகு பேரவைத் தலைவர் | 52 - 59 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 59 |


222385

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 10, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 மே 24, வியாழக்கிழமை**

*மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்* **திரு. ம. அப்துல் லத்தீப்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:**

"அன்புஅறிவு தேற்றம் அவாஇன்மை இந்நான்கும்

நன்குடையான் கட்டே தெளிவு."

அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், அவா இல்லாமை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாக உடையவரைத் தேர்வு செய்யலாம்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்பு

### உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள், உறுதிமொழியை எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே உறுதிமொழியை எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் இப்போது உறுதிமொழியை எடுத்துக்கொள்ளலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகே பேரவையில் அமர வேண்டும்.

[2001 மே 24

## 2. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவையின் இன்றைய அலுவல், அரசமைப்புச் சட்டத்தின் 178—வது பிரிவின்கீழ் பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். அப்பதவிக்கு, வேட்பாளரின் வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவையின் முதன்மைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை விதி 7(4)—ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இந்தப் பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:

நியமனம் செய்யப்பெற்றவர்: டாக்டர் கா. காளிமுத்து அவர்கள்

முன்மொழிந்தவர் : மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள்

வழிமொழிந்தவர் : மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள்

பேரவைத் தலைவர் பதவிக்கு டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதால், டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் இப்பேரவையின் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் பேரவைக்கு அறிவிக்கின்றேன். இத்துடன் என்னுடைய அலுவல் முடிவடைகிறது.

இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தேர்ந்தெடுக்கப்படுகின்ற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், ஆளுங்கட்சியை அடுத்து பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றக் கட்சியின் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.



2001 மே 24] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமரச் செல்லும் நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று, பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்களும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களும் அழைத்து வந்து அவர்களது இருக்கையில் அமரச் செய்தார்கள்.)

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தாயை வணங்குகின்றேன்,
தமிழ்த் தாயை வணங்குகின்றேன்;

உணர்வு நாளம் எல்லாம், எங்கள்
உதிரத் துளியில் எல்லாம்
உறைந்து கிடக்கின்ற தமிழே
உன்னை வணங்குகின்றேன்.

எங்கள் பகைவர் இன்று
எங்கோ மறைந்துவிட்டார்,
சங்கே முழங்கு என்று
சங்கத் தமிழை வணங்குகின்றேன்;

அறியாப் புதல்வருக்கும்
அரியாசனம் தந்து
அழகு பார்க்கின்ற அன்னைத்
தமிழை வணங்குகின்றேன்;

மூலையில் கிடந்தோர்க்கெல்லாம்,
முகவரி தந்த எங்கள்
முத்தமிழ்த் தாயை உயிர்
மூச்சென வணங்குகின்றேன்;

தாயை வணங்குகின்றேன்,
தமிழ்த் தாயை வணங்குகின்றேன்.

[2001 மே 24

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8 (2)—ன்படி பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியவர்களின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கின்றேன். அதன் விவரம் வருமாறு:

நியமனம் செய்யப்பெற்றவர் : திரு. அ. அருணாசலம்

முன்மொழிந்தவர் : மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை

வழிமொழிந்தவர் : மாண்புமிகு திரு. வி. ெ ஜயராமன்

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. அ. அ(ருணாசலம் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டிருப்பதா ், திரு. அ. அருணாசலம் அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழகுதற்கு இனிய பண்பாளர், சட்டம் படித்தவர், என் அன்புச் சகோதரர் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4.பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், பாராட்டுரைகளுக்கு நன்றியுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுதல்கள். முதலில் பாராட்டுரையைத் தொடங்கி வைக்கின்றவர் மாண்புமிகு பேரவை முன்னவர், நிதியமைச்சர், என் அன்புச் சகோதரர் திரு. சி. பொன்னையன் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தங்களையும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. அருணாசலம் அவர்களையும் பாராட்டுவதில் நான் மெத்த மகிழ்ச்சியடைகின்றேன். தங்களது தமிழ் ஆற்றல், தங்களது



2001 மே 24] [திரு. சி. பொன்னையன்]

தமிழ் ஞானம், தாங்கள் முத்தமிழ் வித்தகர் என எல்லோராலும் பாராட்டப்படக்கூடிய அளவிற்குத் தாங்கள் பெற்றிருக்கக்கூடிய ஞானம் ஆகியவை, அனைவரும் அறிந்தவையே. உங்களுடைய குணங்களை பன்னெடும் ஆண்டுகளாக நான் அறிவேன். இந்த அவையில் உள்ள பலரும் அறிவார்கள்.

இந்தப் பேரவையைப் பொறுத்தவரைக்கும் பல சிறப்புகளுக்குரிய பேரவையாகும். முதன்முதலாக Mon tague Chelmsford Reforms என்கிற சீர்திருத்த Committee—ன் மூலமாக, 1921 ஆம் ஆண்டிலே நிறுவப்பட்ட Legislative Council படிப்படியாக விரிவாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு 1935—ல் ஓர் உயர்வு நிலையை அடைந்து, அந்த அடிப்படையில் இந்தப் பேரவை நடைபெற்று வருவதை நாம் அறிவோம்.

முற்பகல் 10—10

முதன்முதலாக திரு. புலுசு சாம்பமூர்த்தி அவர்கள் இந்தப் பேரவையினுடைய பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை நாம் அறிவோம். அதையடுத்து, திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் மிகச் சிறந்த முறையில் இந்தப் பேரவையை நடத்தியதையும், அவர்கள் அந்த நேரத்தில் போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் இந்த அவை அறியும். அதைப்போலவே அவருக்குப் பிறகு திரு. கோபால மேனன் அவர்களும், திரு. கிருஷ்ணா ராவ் அவர்களும், அதைப் போலவே மரியாதைக்குரிய திரு. செல்லப்பாண்டியன் அவர்களும், அதையடுத்து திரு. ஆதித்தனார் அவர்களும் இந்த அவையைப் பெரிதும் சிறப்புக்கு உள்ளாக்கினார்கள் என்பதனையும் இந்த அவை நன்கு அறியும்.

தாங்கள் மேற்கொண்டிருக்கிற பணி மிக உன்னதமான, நீதி வழுவாமல் இருக்கக்கூடிய ஓர் உயர் பணி என்பதனை நாங்கள் அறிவோம். இந்த அவையிலே இதற்கு முன்னாலே இருந்த பேரவைத் தலைவர்களைப் பொறுத்தவரைக்கும் எத்துணைச் சிறப்புகளை இந்த அவைக்குத் தந்திருக்கிறார்கள் என்பதனை நாம் அறிவோம். உங்களது கடந்தகால வரலாற்றிலே அரசியல் உணர்வுகள் எதுவாக இருந்தபோதிலும், நீங்கள் அரசியல் இயக்கங்களில் இருந்தபோதிலும்கூட உங்களுடைய பண்பு மாற்றாரையும் மதிக்கக்கூடிய பண்பாக இருந்தது-அந்த அடிப்படையில் எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் நீதி தவறாமல், அதைச் சீர்தூக்கிப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வரக்கூடிய உன்னதமான துலாக்கோல் போல செயல்படக்கூடிய ஓர் உணர்வுக்குச் சொந்தக்காரராக நீங்கள் இருந்ததை நாம் அறிவோம்.

பெருந்தகை, பேரறிஞர் அண்ணா அவர்களின் காலத்திலிருந்தே திராவிடப் பாரம்பரியத்தில் ஆழ்ந்த ஈடுபாட்டோடு திகழ்ந்திட்ட நீங்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மட்டுமல்ல, பல போராட்டங்களில் ஈடுபட்டு, இந்தத் திராவிட இயக்கத்தினுடைய வளர்ச்சிக்கு நீங்கள் ஆற்றியிருக்கிற பணி மகத்தான பணி என்பதனை இந்த நாடு அறியும். உங்களுடைய எழுத்தாற்றல் சாதாரணமானது அல்ல. உங்களுடைய பேச்சாற்றல் எத்தகைய உன்னதமானது என்பதனை நாங்கள் அறிவோம்.

டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திரு. காளிமுத்து பேசுகிற பேச்சு என்றால், எந்தப் பணி இருந்தாலும்கூட, அந்தக் கூட்டத்திற்கு வந்து, உங்களுடைய பேச்சைக் கவனித்து உங்களை 'தமிழருவி போலப் பேசுகிறார், கருத்தோடு பேசுகிறார், தமிழ்த் தாய் அகமகிழப் பேசுகிறார்' என்று பலரிடம் கூறியதை நான் செவிமடுத்துக் கேட்டு இருக்கின்றேன், அகமகிழ்ந்து இருக்கின்றேன். அந்த அடிப்படையில் நீங்கள் பல சிறப்புகளுக்கு உரியவராகத் திகழ்ந்திருக்கிறீர்கள்.

தங்களது எழுத்தாற்றல் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. யார் மனதையும் புண்படுத்தாமல், அதேநேரத்தில் தமிழ் மணம் கமழும் எழுத்தாக, தமிழ்த்தாய் மகிழக்கூடிய எழுத்தாக, தமிழ்ச் சமுதாயம் மேம்பட வேண்டுமென்ற உணர்வுக்கு உரிய எழுத்தாக, தங்கள் எழுத்துக்கள் அமைந்திருப்பதை இந்த நாடு அறியும். தங்களை இந்த நிலைக்கு, இந்தவொரு உ'ரிய பதவிக்கு, இந்தப் பொறுப்புக்கு தமிழ்த் தாயினுடைய உருவிலே டாக்டர் புரட்சித் தலைவி அவர்களும், அவையிலே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதற்கு என்னுடைய உளங்கனிந்த பாராட்டுதலைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நீங்கள் இந்த அவைக்குப் பல சிறப்புகளை ஈந்து, உங்களைப் பொறுத்தவரைக்கும், வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடு இல்லாமல் இயற்கையிலேயே நன்னெறியில் எதையும் அணுகுகிற உணர்வுக்கு நீங்கள் சொந்தக்காரர் என்பதால், இந்த அவையின் சிறப்பை மேன்மேலும் உயர்த்துவீர்கள் என்ற நம்பிக்கை, ஆழமான நம்பிக்கை இருக்கின்றது. இதுகாறும் இருந்த பேரவைத் தலைவர்களிலேயே நீங்கள் தலைசிறந்த பேரவைத் தலைவர் என்றவொரு நிலையினைத் தமிழ்ச் சமுதாயத்தில், தமிழ் மண்ணில் நிலைநாட்டுவீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





அதைப்போலவே, பேரவையினுடைய துணைத் தலைவர் திரு. அருணாசலம் அவர்கள் மிகச் சிறந்த பண்பாளர்; அமைதிக்கும் அன்பிற்கும் சொந்தக்காரர். எந்தவொரு பிரச்சினையாக இருந்தாலும் மிக நிதானமாக, அளப்பரிய பொறுமையோடு அணுகக்கூடிய உணர்வுக்குச் சொந்தக்காரர். டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அத்தகைய ஒரு நல்லவரை, நடுநிலை தவறாத வல்லவரை இந்தப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். நீங்கள் பேரவைத் தலைவர் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்து, பேரவையின் சிறப்புகளை மேன்மேலும் உயர்த்தும் வகையில் செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டு. உங்களுக்கும் என் வாழ்த்துக்களைக் கூறி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள்.

*** பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற துவக்கத்தில் தாங்கள் ஒருமனதாகப் பேரவையினால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்காக என்னுடைய உளமார்ந்த மகிழ்ச்சியையும் வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையினுடைய செயல்பாட்டுக்கு, இந்த அவை ஆற்ற வேண்டிய கடமைகளுக்கு தலைவராக வந்திருக்கிற தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டதேகூடப் பெருமளவுக்குத் துணையாகும் என்ற நம்பிக்கையையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய சபாநாயகருடைய கடமையை எண்ணிப்பார்த்தோ அல்லது அந்தக் காலச் சூழ்நிலையில் சமுதாயத்திற்கு வழிகாட்டுகிறவர்கள் விளங்க வேண்டிய நிலைமையை எண்ணிப்பார்த்தோ திருவள்ளுவர் நடுவுநிலைமை குறித்து மிக அழகாக எடுத்துச் சொன்னார்கள்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று. சான்றோர் என்று அந்த நாளில் குறிப்பிட்டதை இன்றைக்குச் சபாநாயகருக்கு மிகவும் பொருத்தமுடைய ஒரு சொல்லாக நான் மதிக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த நடுவுநிலைமை என்பதுதான் இந்தச் சட்டமன்றத்திற்கு வலிவு சேர்ப்பது; பொலிவு சேர்ப்பது; சட்டமன்றத்தினுடைய பயனை உயர்த்திக் காட்டுவது. மற்றொரு குறளில் திருவள்ளுவர்,

“தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்”

என்று சொன்னார். அந்தக் குறள் ஒரு சட்டமன்றத்தையே படம் பிடிப்பது போல அமைந்திருக்கிறது. ஏனென்றால், சட்டமன்றம் பல பகுதிகளைக் கொண்டது; பல கட்சிகளைக் கொண்டது பல கொள்கை, கோட்பாடுகளைக் கொண்டவர்களைத் தேர்ந்தெடுத்து இங்கே அனுப்பி வைத்திருக்கிற மக்களுடைய உரிமையைப் பிரதிபலிப்பது. இந்தப் பகுதிகளுக்கிடையில் நடுவுநிலைமை என்ற தகுதி உடைய ஒருவராக சபாநாயகர் விளங்குகிறபோதுதான் இந்தப் பகுதிகள் எல்லாம் தங்கள் தங்களுடைய நியாயமான உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளக்கூடிய வாய்ப்புப் பெறும் என்பது அந்தக் குறள் மூலமாக நாம் உணரத்தக்க ஓர் உண்மையாக இருக்கிறது. எனவே, அந்த வகையிலே தாங்கள், தங்களுடைய உள்ளத்து உணர்வுகளில் தலையாய உணர்வு தமிழ் உணர்வாக இருப்பதை இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டதிலே இருந்து, முத்தமிழ்த் தாய்க்கு முதல் வணக்கம் செலுத்தி இந்தப் பணியை ஏற்றதிலே இருந்து, அந்த உணர்வு மேம்பட்டு நிற்கிற காரணத்தால், தமிழ் உணர்வு, நடுவுநிலைமை உணர்வோடு மிக நெருக்கமுடையது, பொருத்தமுடையது என்ற வகையில் தாங்கள் அதிலே வெற்றி பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தங்களைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ மாணவப் பருவத்திலே இருந்து அறிகிற வாய்ப்பு உடையவனாக நான் இருந்தேன். மாணவப் பருவத்தில் உணர்ச்சிமிக்கவராக, எழுச்சிமிக்கவராக, தாய்மொழி தமிழைக் காப்பாற்ற, ஆதிக்க இந்தி தமிழ்நாட்டில் அடியெடுத்து வைக்கக்கூடாது என்று அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுறுத்திய அந்த அறிவுரையைப் பின்பற்றி அதற்காக நடைபெற்ற அறப் போராட்டத்தில் அரசமைப்புச் சட்டத்தினுடைய ஆட்சிமொழிப் பிரிவை 1964-வது ஆண்டு கொளுத்துவதற்கு உடன்பட்டு மதுரை மாநகரத்தில் மதுரை முத்து அவர்களும், தாங்களும் அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டு, அதிலே வழியனுப்பி வைக்க வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் வழியனுப்பி வைத்த, அந்தப் போராட்டம் காரணமாகச் சிறைப்பட்டவர்கள் நீங்கள். சிறைப்பட்டாலும்கூட,



வேறுவிதமான விளைவுகளைத் தாங்கள் சந்திக்க அன்றைக்கு நல்ல வேளையாக நிலைமை அமையாமல் இருந்தது. அரசமைப்புச் சட்டத்தினுடைய ஆட்சிமொழிப் பிரிவை மட்டும் கொளுத்தி, ஓர் அறப் போராட்ட உணர்வைக் காட்டுவதற்காக நீங்கள் ஈடுபட்டதன் காரணமாக அன்றைக்கு நீங்கள் சிறைத் தண்டனை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதற்காக உங்களுடைய உண்மையான தமிழ் உணர்வை நான் பாராட்டினாலும், அதே போன்ற ஒரு காரியத்தில் நான் 1987-வது ஆண்டு ஈடுபட்டபோது, இங்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்த நான் சிறைப்பட்டது மட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் இழக்க நேரிட்டது என்பதை நான் தங்களுக்கு நினைவூட்டுவது, நிலைமைகள் மாறுகிறபோது சூழ்நிலைகள் மாறுகிறபோது, கிடைக்கிற தண்டனைகளும் மாறுகின்றன என்பதற்காக மட்டுமல்ல; நடுவுநிலைமை உணர்வு என்றைக்கும் இந்தச் சபையில் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக நான் அந்தச் செய்தியை நினைவூட்டுகிறேன்.

முற்பகல் 10-20

குறிப்பாக அறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே முதன்முதலாக இடம்பெற்ற அந்தக் காலத்தில், அவைத் தலைவராக அன்றைக்கு டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள் இருந்தபோது பேசிய கருத்தை இன்றைக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆளும்கட்சிக்கு வலிமை என்பது எதிர்க்கட்சிக்கு உரிமை தருவது என்பதுதான். எதிர்க்கட்சிகள் வலிவற்றவையாக எண்ணிக்கையிலே இருந்தாலும்கூட மக்களைப் பிரதிபலிக்கிற உரிமை பெற்றவை என்ற காரணத்தால் எதிர்க்கட்சிகளுக்கு — எதிரிக்கட்சிகள் என்ற கருத்திலேகூட அல்ல — வெறும் எதிர்க்கட்சிகள், எண்ணங்களை, தனி எண்ணங்களைக் கொண்ட கட்சிகள், கொள்கைகளைக் கொண்ட கட்சிகள், அந்தக் கட்சிகளுக்கு—அவர்களுடைய கொள்கைகளை, கருத்துக்களைச் சொல்வதற்கான உரிமையைப் பாதுகாத்துத் தரவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு இருக்கிறது என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த அடிப்படையில் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகச் சட்டமன்றம் ஒரு நல்ல மரபை நீண்டகாலமாக வளர்த்து வருகிறது. இங்கே அவை முன்னவர் பேசியபோது சொன்னதைப்போல, ஏறத்தாழ திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள் தலைவராக இருந்த அந்தக் காலத்திலேயிருந்து, ஒரு நல்ல மரபு, எண்ணங்களுக்கு முழு உரிமை தருகிற ஒரு மரபு — ஆனால் பாராளுமன்ற

[பேராசிரியர் க. அன்பழகன்] [2001 மே 24

நெறிமுறைப்படியான நடையில் பேச வேண்டும் என்ற ஒன்றைத் தவிர, Parliamentary முறைகளுக்குட்பட்டுப் பேச வேண்டும் என்பதைத் தவிர, பேசுவதற்கான உரிமை நாளுக்கு நாள் வளர்ந்து வந்திருக்கிறது. அப்படி வளர்வதுதான் நாட்டுக்கு நல்லது. கருத்துக்கள் பரிமாற்றத்தைவிட ஜனநாயகத்திலே உயிரோட்டம் உடையதாக வேறு எதையும் நாம் கருதுவது இல்லை. எனவே, அப்படிப்பட்ட அந்த நல்ல வாய்ப்பையும் சட்டப் பேரவைத் தலைவர் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றத்தில், எதிர்க்கட்சியாக இருந்த நண்பர்கள் எண்ணிக்கையிலே மிகக் குறைவாக இருந்தாலுங்கூட, அந்த மிகக் குறைந்த எண்ணிக்கையுள்ள கட்சியைச் சார்ந்த நண்பர்களுக்கும் உறுப்பினர்களுக்கும், தகுந்த அளவிற்கு அவர்கள் இங்கே உரையாற்றுவதற்கான முழு வாய்ப்பும் வழங்கப்பட்டு அந்த முறையிலே ஜனநாயக நெறிமுறைகள் மிகவும் காப்பாற்றப்பட்டன. அது மேலும் தொடரப்பட வேண்டுமென்று நான் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. சட்டம் ஒன்றுதான் — அதுவும் நம்முடைய சட்டமன்றத்திலேயே நம்மால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற சட்டப் பேரவையினுடைய சட்ட விதிகள் ஒன்றுதான் நம் அனைவருக்கும் பாதுகாப்பு; அனைவருக்கும் உரிமையை வழங்குகிற ஓர் அடிப்படை. எனவே, அந்தச் சட்டத்தை முழு அளவில் நாம் மதித்துச் செயல்படுத்த வேண்டும். அதற்குத் தாங்கள் துணை நிற்க வேண்டும், வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு தங்களுடைய பணி வெற்றிகரமாக அமைய என்னுடைய உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள் தங்களுடைய கடமையை சட்டமன்றத்தினுடைய மேன்மைக்கு ஏற்றவகையில், சட்டமன்றத்தினுடைய பெருமையைக் காக்கிற முறையில், அவர்களும் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து, தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த வாழ்த்துக்களைக் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.



2001 மே 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தேர்தலிலே, நீங்களும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களும் இந்தப் பேரவையினாலே ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு என் சார்பிலேயும், நான் சார்ந்திருக்கிற தமிழ் மாநில காங்கிரஸ் சார்பிலேயும் என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவை முன்னவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களும் உங்களைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். நான் அதிக நேரம் பேச விரும்பாவிட்டாலும்கூட, சில விஷயங்களை மட்டும் இங்கே நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

முற்பகல் 10-25

தாங்கள் வீற்றிருக்கிற இந்த ஆசனத்துக்கு ஒரு வரலாறு உண்டு. 1921 ஆம் ஆண்டு இந்த மாநிலத்தினுடைய — அன்றைய சென்னை ராஜதானியினுடைய — ஆளுநராக விளங்கிய வில்லிங்டன் பிரபு அவர்கள் அவைக்கு தன்னுடைய பரிசாக அதை வழங்கினார்கள். அவர் பரிசாக வழங்கிய நேரத்தில், 'நீங்களும் உங்களைத் தொடர்ந்து இந்த ஆசனத்தில் அமரப் போகிறவர்களும் இந்தச் சட்டப் பேரவையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் கட்டிக் காப்பீர்கள் என்று நம்புகின்றேன்' என்று கூறி இந்த ஆசனத்தை வழங்கினார்கள். இதுவரை இந்தப் பேரவையிலே இருந்தவர்கள் பெரும்பாலும் இந்தச் சபையினுடைய கண்ணியத்தைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள். நீங்களும் நிச்சயமாகக் காப்பாற்றுவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

பொதுவாக, இன்றையதினம் உங்களை அவை முன்னவர் அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றப் பேரவைக் கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களும் அழைத்து வந்துதான் அமர வைத்தார்கள். நிச்சயமாக இழுத்து வரவில்லை. அந்தக் காலத்திலே Speaker என்ற பதவி ஒன்று உருவான நேரத்திலே இழுத்து வந்துதான் அமரச் செய்வார்கள் என்று சொல்வார்கள். கட்டாயமாகப் பிடித்து, அழுத்திப் பிடித்து, ஓடிவிடக் கூடாதென்று அழுத்திப் பிடித்துக்கொள்வார்கள் என்று அந்தக் காலத்திலே சொல்வார்கள்.

பாராளுமன்றத்தினுடைய தொட்டிலாக விளங்குகின்ற British பாராளுமன்றத்திலேதான் முதன்முதலாக Speaker என்று வந்தது Speaker ஏன் தேவைப்பட்டார் என்று சொன்னால் மக்கள் சபை—Commons சபையினுடைய—உறுப்பினர்கள் மன்னரை நேரடியாகச் சந்திக்க முடியாது. இந்தச் சபையிலே என்ன விவாதிக்கப்படுகிறது என்பதை எடுத்துரைப்பதற்கு ஒருவர் தேவைப்பட்டார். அதற்காக Speaker–ஐ — தலைவரை — அவர்கள் தேர்வு செய்தார்கள். தேர்வு செய்யப்பட யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். ஏனென்றால் சபையிலே பல விஷயங்கள் விவாதிக்கப்படும், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்படும். நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களை மன்னரிடத்திலே சொல்வதற்கு யாருக்கும் துணிச்சல் கிடையாது, தைரியம் கிடையாது அந்தக் காலத்திலே. அதனாலேதான் கண்டிப்பாக அமர்ந்தே தீர வேண்டும் என்று யாராவது ஒருவரைத் தேர்வு செய்து கொண்டுபோய் அங்கே அமர வைப்பார்கள். அந்த நிலை எல்லாம் இன்றையதினம் இல்லை. உங்களை அழைத்து வந்த நேரத்திலே நீங்களும் புன்முறுவலோடு வந்தீர்கள். உங்களை அழைத்து வந்த அவை முன்னவர் அவர்களும் புன்முறுவலோடுதான் வந்தார்கள். நீங்கள் அந்த ஆசனத்தில் அமருவதை முதலமைச்சர் அவர்களும் புன்முறுவலோடு, நாங்களும் புன்முறுவலோடுதான் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆக, வரலாறு பழைய வரலாறாகப் போய்விட்டது.

இன்றையதினம் நீங்கள் இந்த ஆசனத்தை அலங்கரிக்க வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு முன்னாலே சுதந்திர இந்தியாவிலே பல பேரவைத் தலைவர்கள் நம்முடைய சென்னை சட்டப் பேரவையைப் பொறுத்தவரையிலும் சரி, தமிழ்நாடு சட்டமன்றத்தைப் பொறுத்தவரையிலும் சரி, இங்கே இருந்திருக்கிறார்கள். முன்னவர் அவர்கள் பட்டியல் போட்டார்கள் இங்கே. அதிலே புலுசு சாம்பமூர்த்தியிலே ஆரம்பித்து. சுதந்திர இந்தியாவினுடைய, குடியரசினுடைய, முதல் சபாநாயகராக், பேரவைத் தலைவராக அன்றையதினம் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் தமிழகத்தில் பெரிய போட்டிகளுக்கிடையே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் சபையை மிகவும் கண்ணியத்தோடு நடத்தியிருக்கிறார்கள். சபையிலே எந்த அளவுக்கு அன்றையதினம் நடந்துகொண்டார்கள் என்று சொன்னால், இரண்டாவதாக சபாநாயகராக வந்த கிருஷ்ணா ராவ் அவர்கள், அண்ணாவாலே மிகவும் பாராட்டப்பட்ட கிருஷ்ணா ராவ் அவர்கள், ஒரு முறை சபையிலே இருக்கின்ற ஆளுங்கட்சி உறுப்பினர்கள்



நீங்கள் 'எதிர்க்கட்சியிலே இருப்பவர்களைத்தான் அடிக்கடி பேச அழைக்கிறீர்கள், எங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பே கொடுக்கவில்லை' என்று சொன்னபோது உடனே கிருஷ்ணா ராவ் அவர்கள், 'உங்களுக்குப் பேசுவதற்கு அதிக வாய்ப்பு வேண்டுமென்றால் எனக்கு இடது பக்கத்திலே வந்து உட்காருங்கள்' என்று சொன்னதாகச் சொல்வார்கள். அந்த அளவுக்கு அவர்கள் எல்லாம் அன்றையதினம் சபையினுடைய அனைத்துத் தரப்பினராலும் பாராட்டப்பட்டிருக்கிறார்கள், கௌரவிக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே வந்த திரு. செல்லப்பாண்டியன் அவர்களும் சபையினுடைய கண்ணியத்தை ஒருபோதும் விட்டுக்கொடுத்ததில்லை. சபையினுடைய உண்மையான பாதுகாவலராக அவர்கள் விளங்கியிருக்கிறார்கள்.

1967 ஆம் ஆண்டில் வரலாறு திரும்பியது. திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக இங்கே பொறுப்பேற்றுக் கொண்ட நேரத்தில் திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். அவருடைய காலத்திலேதான் முதன்முதலாக ஆங்கிலத்தினுடைய 'ஆதிக்கம்' கொஞ்சம் குறைந்து தமிழிலே சபை நடவடிக்கைகள் பெருமளவுக்கு நடக்க ஆரம்பித்தன. முதன்முதலிலே "பேரவையினுடைய முடிவிற்கு விடப்படுகிறது. ஏற்போர் 'ஆம்' என்க, மறுப்போர் 'இல்லை' என்க" என்பன எல்லாம் அவருடைய காலத்திலேதான் கொண்டுவரப்பட்டன.

அதேமாதிரி உங்களைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. உங்களைப் பொறுத்தவரையில் உங்களுடைய தமிழ் ஆர்வம் அனைவரும் அறிந்த ஒன்று. அதுவும் பேராசிரியர் அவர்கள், 'நான் மாணவப் பருவத்திலேயிருந்து அவர்களை அறிவேன், அவர் தமிழ் ஆர்வம் எங்களுக்கு நன்றாகத் தெரியும்' என்று இங்கே அழகாகக் குறிப்பிட்டார்கள். உங்களுடைய தமிழ் ஆர்வம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். மாணவப் பருவத்திலேயிருந்து சிறந்த மேடைப் பேச்சாளராக விளங்கியவர் நீங்கள். உங்களுடைய பேச்சைக் கேட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், 'மேடை மணி' என்ற அடைமொழியைக் கொடுத்துப் புகழாரம் சூட்டியிருக்கிறார்கள். பின்னர் விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரியிலே புகுமுக வகுப்பு சேர்ந்து படித்தபோது கோவை புச.கோ. கலைக் கல்லூரியினுடைய நாவலர் மன்றம் மாநில அளவில் கல்லூரிகளுக்கிடையே நடத்திய பேச்சுப் போட்டியில் தாங்கள் சார்ந்திருக்கும் அணிதான் சுழற்கோப்பையைத் தட்டிச் சென்றது என்பது வரலாறு. இவை எல்லாம் இங்கே பதிவு செய்யப்பட வேண்டியவைதான்.

[திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்] [2001 மே 24

பல போராட்டங்களிலே கலந்து கொண்ட நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பாக மொழிப் போரிலே கலந்து கொண்டு 6 மாதம் சிறைத் தண்டனை பெற்றிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்து எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்டபோது அவருடன் சேர்ந்து வெளியேறிய முதல் சட்டமன்ற உறுப்பினர் தாங்கள்தான் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. எம்.ஜி.ஆர். அமைத்த முதலாவது அமைச்சரவையில் அமைச்சராக இடம்பெற்று இருந்திருக்கிறீர்கள். தமிழிலே முனைவர் பட்டம் பெற்றிருப்பவர். எம்.ஜி.ஆர். விரும்பியதற்கேற்ப அவர் நடித்த 'இன்று போல் என்றும் வாழ்க' என்ற திரைப்படத்திற்கு கதை, வசனம் எழுதியிருக்கிறீர்கள். நல்ல கவிஞர். நீங்களும், கவிஞர் நா. காமராசனும் திராவிட இயக்க வரலாற்றில் சிறப்பான ஒரு இடத்தைப் பெற்றிருக்கிறீர்கள்.

முற்பகல் 10–30

இத்தகைய பெருமைக்குரிய ஒருவர் இப்போது இம்மாமன்றத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருப்பது பெருமைக்குரியதாகும். சட்டமன்ற மரபுகளைக் காப்பதிலும், விதிமுறைகளைக் காப்பதிலும் நடுநிலை வகிப்பீர்கள் என்பதிலும், அவையின் கண்ணியத்தையும், உறுப்பினர்களுடைய உரிமைகளையும் போற்றிப் பாதுகாப்பீர்கள் என்பதிலும் எங்களுக்கு முழுமையான நம்பிக்கையிருக்கிறது. எல்லாவற்றையும்விட தங்கள்மீது நம்பிக்கை வைத்திருந்து இந்தப் பொறுப்புக்குத் தேர்வு செய்து, இந்தக் கண்ணியமிக்க இருக்கையில் அமர்த்தியிருக்கும் முதலமைச்சருடைய நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ப சிறந்த அவைத் தலைவராக செயல்படுவீர்கள் என்று நான் திடமாக நம்புகின்றேன். ஏனெனில், இந்தப் பொறுப்புக்கு முதலமைச்சர் தேர்வு செய்தவுடனே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே நீங்கள் வகித்து வந்த அவைத் தலைவர் என்ற பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்து, பதவி விலகல் கடிதத்தையும் கட்சியின் பொதுச் செயலாளருக்கு அனுப்பியிருக்கிறீர்கள். அதன்மூலம் ஒரு உயர்ந்த மரபினை இங்கே நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். இந்த நடைமுறை — பாராளுமன்ற சபாநாயகராக, விட்டல் பாய் பட்டேல் அவர்கள் பொறுப்பேற்றபோது, அவருக்குப் பக்கத்திலே அன்றையதினம் காங்கிரஸ் தலைவராக வீற்றிருந்த மோதிலால் நேரு அவர்களிடத்திலே அவர் சொல்லியிருக்கிறார். 'மோதிலால், நான் இன்றுமுதல் காங்கிரஸ்காரன் இல்லை. நான் இன்றுமுதல் எந்தக் கட்சியையும் சாராதவன், சபாநாயகர் பொறுப்பில்



2001 மே 24] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

அமர்ந்து நடுவுநிலைமையில் துலாக்கோல் போல் அமைந்து சபையை நடத்தக் கடமைப்பட்டவன்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். அதே உணர்வுடன் நம்முடைய பேரவைத் தலைவரும் ஒரு நல்ல மரபுக்கு வழிவகுத்திருக்கிறார்கள். அதற்காக அவரை மனம் திறந்து பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற திரு. அருணாசலம் அவர்களைப் பற்றி பேராசிரியர் அவர்களும், அவை முன்னவர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவரும் இதற்கு முன்பு உங்களோடு சேர்ந்து இதே அவையிலே பணியாற்றியிருக்கிறார்கள்; அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார்கள். புரட்சித் தலைவியினுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக விளங்கியிருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அவையை நடத்திச் செல்வதிலே அவர் உங்களுக்கு நல்ல முறையிலே துணையாக இருப்பார் என்று நம்புகின்றேன். நீங்கள் அவையை நடத்திச் செல்வதில் எங்களுடைய முழுமையான ஒத்துழைப்பு என்றைக்கும் உண்டு என்று கூறி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜி.கே. மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நூற்றாண்டில் புதிய சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று இன்று நடைபெறக்கூடிய இந்தத் தமிழகச் சட்டப்பேரவையின் நிகழ்ச்சியிலே பேரவையினுடைய தலைவராகப் பொறுப்பேற்ற நீங்கள் செயல்படுவதற்கான நல்ல வாய்ப்பினை வழங்கிய நம்முடைய மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவராகவும், மக்களால் அமோக வெற்றி பெறச் செய்யப்பட்ட உன்னதமான முதலமைச்சர் என்று பெயரைத் தரக்கூடிய வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நல்லவரால் அடையாளம் காட்டப்பட்டு இந்த அரிய நேரத்திலே 'காலம் கருதி இடத்தாற் செயின்' என்ற வள்ளுவரின் கூற்றுக்கேற்ப பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்று அரியாசனத்திலே அமர்ந்திருக்கக்கூடிய அந்தக் காட்சியைக் கண்டு நான் சார்ந்திருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, பதவி ஆசையில்லாத தலைவர் டாக்டர் ஐயா அவர்கள் இங்கே வரவில்லையென்று சொன்னாலும்கூட, அவரின் சார்பிலே, உங்களை நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

[திரு. ஜி.கே. மணி] [2001 மே 24

வாழ்த்தக்கூடிய அந்த நேரத்திலே, நான் வயதிலே இளையவனாக இருந்தாலும்கூட, ஒன்றை நினைத்துப் பார்க்கிறேன், படித்திருக்கிறேன். தமிழகத்தினுடைய சட்டமன்றத்திற்கு இந்தியத் துணைக் கண்டத்திலே மிகப் பெரிய வரலாறு இருக்கிறது. இது மாண்பு நிறைந்த மாமன்றம், மரபுகள் நிறைந்த மாமன்றம். இந்தியத் திருநாட்டில் வெள்ளையர் ஆட்சிக் காலத்திலேயிருந்து பெயரும், புகழும் நிலைத்து நிறுத்தப்பெற்ற நம்முடைய தமிழகச் சட்டப் பேரவையிலே, இந்த நூற்றாண்டினுடைய புதிய சட்டப் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நாளிலே தமிழ்த் தாய்க்கு வணக்கத்தைச் செலுத்தி நீங்கள் பொறுப்பேற்றிருக்கிறீர்கள்.

நீங்கள் மாணவப் பருவத்திலேயிருந்து தமிழ்மீது எவ்வளவு பற்றுக் கொண்டிருந்தீர்கள் என்பதை இங்கே குறிப்பிட்டார்கள். அறிந்த நாளிலேயிருந்து இன்றையவரையிலும், தமிழ் மக்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழ்மொழிக்கும் ஆற்றிய பணி என்பது அளவிடற்கரியது. ஆகவே, உங்களுடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டுகின்ற வகையிலே நீங்கள் ஒரு மிகப் பெரிய தமிழறிஞர் என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழிலே உங்களுடைய எழுத்துக்களை நான் படித்திருக்கிறேன். படித்த காரணத்தினாலேயே சொல்கிறேன். நீங்கள் ஒரு மிகப் பெரிய எழுத்தாளர். உங்களுடைய அறிவாற்றலைச் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்திலே நீங்கள் ஓர் அறிவுக் களஞ்சியம், அறிவுக் கடல் என்று நான் சொல்லப் பெருமைப்படுகிறேன். ஆகவே, அந்தவகையிலே மிகப் பெரிய தத்துவ மேதையாக, மிகப் பெரிய தமிழ் அறிஞராக, அறிவுக் கடலாக, அறிவுக் களஞ்சியமாக விளங்கக்கூடிய நீங்கள் இந்த அரியதோர் மாமன்றத்திலே தலைவர் அரியாசனத்திலே அமர்ந்திருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கின்ற நேரத்திலே அனைத்துக் கட்சிகளின் சார்பிலே உங்களைப் பாராட்டுகின்ற நேரத்திலே, முதலிலே உங்களுக்கு வாய்ப்பளித்த தலைமைக்கு நான் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், யார் யார் எதைச் செய்து முடிப்பார்கள் என்ற வள்ளுவனுடைய கூற்றுக்கு ஏற்ப ஒரு நல்ல தேர்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, தேர்வு செய்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எத்தனை முறை பாராட்டினாலும் தகும் என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2001 மே 24] [ திரு. ஜி.கே. மணி]

முற்பகல் 10–35

அப்படி அந்தத் தேர்வைப் பற்றிச் சொல்லுகிற நேரத்திலே உங்களுடைய சொல் வலிமைமிக்கது, அந்தச் சொல் வலிமை மிக்கது என்ற காரணத்தினாலே, உங்களுக்காகவோ என்னவோ தெரியவில்லை— நம்முடைய வள்ளுவர் அழகாக

"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது"

என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, அந்த அளவுக்கு சொல்வன்மை மிக்க நீங்கள், மிகப் பெரிய பேச்சாளர். சொல்வன்மை மிக்கவராக இருந்தாலும்கூட இந்த மாமன்றத்திலே உங்களுடைய பேச்சு என்பது மிகக் குறைவாக இருக்கும். இருந்தாலும்கூட, இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பேச்சுரிமை இருக்கிறது. ஆகவே, மற்றவர்களுக்கு எல்லாம் பேசுவதற்கு வாய்ப்பு அளித்து, உங்களுடைய சொல் ஆற்றலாலே, சொல் வன்மையாலே ஊக்குவிப்பதற்கும், மரபுகளை மீறிப் பேசுபவர்களை நீங்கள் கண்டிப்பதற்கும் உங்களுடைய சொல் வன்மை பயன்படும் என்கிற காரணத்தினாலேதான் வள்ளுவர் உங்களுக்காகவே இதைச் சொல்லியிருக்கிறார் என்று கருதுகிறேன். ஆகவே, சொல்வன்மை மிக்க நீங்கள், மிகப்பெரிய அறிவு ஆற்றல் மிக்கவர். அதனை வள்ளுவர் அழகாக

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று சொல்கிறார். ஆகவே, அந்த அளவுக்கு உண்மை நிலையைக் காணக்கூடிய மிகப்பெரிய அறிவு ஆற்றல் மிக்க ஒரு தலைவர் நீங்கள் என்பதை அறிந்து இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்திலே கட்சிகள் என்ற வரிசையிலே, ஆளும் கட்சிகள், ஆளும் கட்சிகளுக்குச் சாதகமான கூட்டணிக் கட்சிகள், எதிர்க்கட்சிகள் என்று இருந்தாலும் கூட, 'துலாக்கோல்' போல் நின்று நடுவுநிலைமையாகப் பணியாற்றக்கூடிய உயர்ந்த இடத்தில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, அந்த வகையிலே, நீங்கள் நடுவுநிலைமையோடு மன்றத்தினுடைய மரபுகளைக் காக்கக்கூடிய அளவிலே இருப்பீர்கள் என்று நம்புகிறோம், வரவேற்கிறோம். அந்த வகையிலே வள்ளுவர் அழகாகச் சொல்கிறார்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்று. ஆகவே, அந்த அளவுக்கு மிகப்பெரிய சான்றோன் என்று சொல்லக்கூடிய பெருமைக்கு உரியவர். இப்படி எந்த வகையிலே வார்த்தைகளைச் சொன்னாலும் தங்களுக்குத் தகும்.

அந்த வகையிலே, அன்புக்குச் சொந்தக்காரர், நல்ல பண்புக்குச் சொந்தக்காரர், அறிவிலே ஆற்றல் மிக்கவர். தனித் திறமை கொண்டவர். இளமைப் பருவத்திலிருந்து இதுவரை நீங்கள் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் ஆற்றிய பணியை மனதிலே கொண்டுதான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரிய வாய்ப்பினை வழங்கியிருக்கிறார்கள் என்ற மகத்தான செய்தியை மீண்டும் ஒருமுறை சொல்லி, இந்த மாமன்றத்திலே செயலாற்றுவதற்காக, அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற தங்களுடைய பணி மேலும் சிறக்க வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலே, இந்த மாமன்றம், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, சிறந்து விளங்குகின்ற ஒரு பேரவை என்ற பெருமையை நிலைநாட்டக்கூடிய வகையிலே, உங்களுடைய பணி சிறக்க வேண்டுமென்று சொல்லி, எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களுடைய சார்பிலேயும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலேயும் நாங்கள் மனதார உங்களைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம்.

அதேநேரத்திலே, உடல்நலக் குறைவாக இருந்த தாங்கள், பூரண குணம் பெற்று, முழு நிம்மதியுடன் பணியாற்றுகிற வகையிலே ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற்றிருக்கிறீர்கள். ஆகவே, மீண்டும் உங்களுடைய உடல் நலம் உரம் பெற வேண்டும். நீங்கள் நோயற்ற வாழ்வு வாழ வேண்டும். ஆகவே, அந்த வகையிலே, நீண்ட ஆயுளுடன், நீடூழி வாழ வேண்டும் என்று மீண்டும் உங்களை மனதார வாழ்த்துகிறோம்.

இந்த மாமன்றத்திற்கு, உங்களுக்கு உறுதுணையாக நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அருணாசலம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவரை நான் இளம் வயதிலிருந்து நன்கு அறிந்தவன். நன்கு சட்டம் படித்தவர், அமைதியானவர், அடக்கமானவர். ஆகவே, அவருடைய பணி, நம்முடைய மாமன்றத்திற்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் தேவை என்ற வகையிலே, அவரும் இங்கே உடல்நலத்துடன் நீடூழி வாழ வேண்டும். அவருடைய பணி இந்த



மாமன்றத்தில் சிறக்க வேண்டுமென்று அவரையும் மனதார வாழ்க, வாழ்க என்று வாழ்த்தி, பேரவைத் தலைவர், துணைத் தலைவர் இருவரையும் வாழ்த்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்கள்.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே எல்லா தலைவர்களும் பேசியது போல, இந்த நூற்றாண்டினுடைய முதல் பேரவைத் தலைவராகத் தற்போது நீங்கள் பதவி ஏற்றிருக்கிறீர்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் சார்பாகவும், மாற்றுக் கட்சியினுடைய, தோழமைக் கட்சியினுடைய சார்பாகவும், எங்களுடைய உளமார்ந்த நல்வாழ்த்துக்களையும், நன்றியையும், நமஸ்காரத்தையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

முற்பகல் 10—40

தாங்கள் நன்றாகப் படித்தவர், எழுத்தறிவில் மிகச் சிறந்தவர். அநேக சிறு கதைகளை எல்லாம் எழுதியிருக்கிறீர்கள். அநேக திரைக் கதை வசனங்களை எல்லாம் எழுதிச் சிறப்புற்றிருக்கிறீர்கள். இந்த மாமன்றத்திலே பல முறை மாண்புமிகு உறுப்பினராக இருந்து மிகவும் சிறப்பான வகையிலே பணியாற்றி இருக்கிறீர்கள். அந்த வகையிலே, இந்த மிகப் பிரசித்தி பெற்ற பேரவையில் நீங்கள் இன்று பதவியேற்றது குறித்து நாங்கள் எல்லாம் பெருமைப்படுகிறோம்.

பேரவையினுடைய துணைத் தலைவராக, ஸ்ரீ ராமபிரானுக்கு ஸ்ரீ லட்சுமணராக, தங்களுக்கு உறுதுணையாக இருக்கும் மாண்புமிகு அருணாசலம் அவர்கள் சட்டம் படித்தவர், வல்லுநர், நன்கு பழகக்கூடியவர், அன்பால் மக்களை ஈர்ப்பவர். நீங்கள் இருவரும் சேர்ந்து, இந்தப் பிரசித்தி பெற்ற மன்றத்தின் மூலமாக கோடானுகோடி மக்களுக்குச் சேவை செய்யும் வகையிலே இரண்டாவது முறையாக மாண்புமிகு முதலமைச்சராக இங்கு பதவி ஏற்றிருக்கும் புரட்சித் தலைவி அவர்கள் உங்களது பெயர்களை ஏகமனதாக அறிவித்து, அந்த அறிவிப்பின் மூலமாக உங்களை மக்களுக்குச் சேவை செய்யச் சொல்லி இருப்பதைப் பார்க்கும்போது நாங்கள் பெருமைப்படுகிறோம் என்பதைச் சொல்லி, நீங்கள் இருவரும் நீடூழி வாழ வேண்டும், வளர வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். வாழ்க பாரதம்! வளர்க பாரதம்!

[2001 மே 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய மிக அந்தஸ்து பெற்ற பொறுப்புக்கு தகுந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கின்ற நேரத்திலே மட்டற்ற மகிழ்ச்சி. மதச்சார்பற்ற ஜனநாயக அணி வெற்றி பெற்று இந்த நாட்டிலே மத ஒற்றுமையையும், மக்கள் ஒற்றுமையையும் நிலைநாட்ட வேண்டுமென்ற மக்களுடைய எண்ணத்தை ஈடேற்றக்கூடிய முறையிலே பொருத்தமானவரை இந்த அவையினுடைய தலைவராகத் தேர்ந்தெடுப்பதில் ஆளுங்கட்சி என்ற முறையிலே சிறப்பைச் செலுத்தி இருப்பதில் எங்களுக்கு மகிழ்ச்சி.

இந்த அவையிலே 1971 ஆம் வருடத்திலே இருந்து நீங்கள் உறுப்பினராக இருந்திருக்கிறீர்கள். அமைச்சராகப் பல வருடங்கள் செயலாற்றி இருக்கிறீர்கள். அந்த வகையிலே, உங்களுடைய சிறப்பையும், உங்களுடைய திறமையையும், நேரிலே பார்ப்பதற்கும், அதிலே மகிழ்வதற்குமான வாய்ப்பு எனக்கும், அதேபோல எங்களுடைய கட்சியைச் சார்ந்த பல நண்பர்களுக்கும் கிடைக்கப் பெற்றிருக்கிறது.

இன்று இந்த அவையினுடைய முன்னவர் அவர்களும், அதேபோன்று எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்களும் இங்கே தங்களைப் பற்றி, தங்களுடைய சிறப்பைப் பற்றி எடுத்து வைத்திருக்கின்ற உணர்வுகளோடு நானும் என்னை இணைத்துக்கொள்கிறேன்.

நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே உங்களைப் பாராட்டுகின்ற நேரத்திலே நான் ஒன்றைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது தவறாக இருக்காது என்று எண்ணுகிறேன். எங்களைப் போன்ற கட்சிகள் எல்லாம் பல நேரங்களிலே, விவாதம் வருகின்ற நேரத்திலே நாங்கள் பொதுவாக உழைப்பாளி மக்களுடைய கருத்தைத்தான் எடுத்து வைக்கிறோம். தொழிலாளி வர்க்கத்தினுடைய, விவசாயிகளுடைய கஷ்டங்களைப் பற்றி, அவர்களுடைய துன்பங்களைப் பற்றி, அவர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சிரமங்களைப் பற்றித் தெரிவிக்க முயல்கின்ற நேரத்திலே எங்களுக்கு வாய்ப்பு மிகவும் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. எங்களுக்குப் போதுமான அளவிலே விவாதத்தில் நேரம் கிடைக்காத நிலைமை இருக்கின்றது. ஆகவே, எங்களைப் போன்ற சிறு கட்சிகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, பேரவைத் தலைவராகத்



2001 மே 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற. மக்களுடைய உணர்வுகளை நன்கு தெரிந்துகொண்டிருக்கிற ஒருவர் என்ற முறையிலே நீங்கள் எங்களுக்கு நியாயம் வழங்குவீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இன்று உங்களுக்கு உறுதுணையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற துணைத் தலைவர் அவர்களும் இந்த உணர்வோடு எங்களைப் போன்ற சிறு கட்சிகளைப் பாதுகாப்பதற்கு அவரும், அவரால் இயன்ற அளவுக்கு முயற்சிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

(முற்பகல் 10–45

இன்று பேராசிரியர் அவர்களும், அதேபோன்று அவை முன்னவர் அவர்களும் எடுத்துச் சொன்னதுபோல, மிகப் பெரிய பாரம்பரியத்தைக் கொண்ட ஓர் அவை இது. இதற்கு முன்னாலே இந்தப் பேரவையினுடைய தலைவர்களாக இருந்தவர்கள் பல சிறப்புகளை எல்லாம் செய்ததாக இங்கே சொன்னார்கள். அந்தப் பாரம்பரியத்தையெல்லாம் தொடர்ந்து காப்பாற்றுவதில் தாங்கள் எந்த முறையிலேயும் தவறாது செயல்படுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. ஏனென்றால், அமைச்சராக இருந்த நேரத்திலே, நீங்கள் இந்த அவையிலுள்ள உறுப்பினர்களோடு பழகியதையும், நாங்கள் வைத்த கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் handle பண்ணிய அந்த முறைகளையெல்லாம் பார்த்திருக்கக்கூடிய நேரத்திலே, எங்களையெல்லாம் எந்த அளவிற்குப் பாதுகாக்க வேண்டுமோ, அந்த அளவிற்குப் பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கையும், இந்த அவையினுடைய neutrality—பாரம்பரியத்தையும் அதேபோன்று அதனுடைய நிஷ்பக்ஷதையையும் எப்படிப் பாதுகாக்க வேண்டுமோ, அந்த முறையிலே நீங்கள் பாதுகாப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு. இருவரையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்டி, வாழ்த்தி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தேர்தலில் மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணிக் கட்சிக்கு ஆளுகிற வாய்ப்பினைத் தந்திருக்கிற தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். ஆளுகின்ற கட்சியின் சார்பாகவும் எதிர்க்கட்சிகளின் சார்பாகவும் இந்த மன்றத்தினுடைய தலைவராக உங்களைத் தேர்ந்தெடுத்து, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் உங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். அதேபோன்று,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக தங்களைப் பாராட்ட நான் கடமைப்பட்டுள்ளேன். குறிப்பாக, இந்த மன்றத்தினுடைய இறையாண்மையைப் பாதுகாப்பதற்கு, கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கு மிகச் சிறந்த ஒரு சட்டப் பேரவைத் தலைவராக உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, பள்ளிப் பருவம் முதல் திராவிட இயக்கத்திலே பங்கு கொண்டு சிறந்த முறையிலே நீங்கள் பணியாற்றியதை நாடு அறியும், நாங்கள் அறிவோம்.

அதோடுமட்டுமல்லாமல், தமிழ் மொழிக்காக மொழிப் போராட்டத்திலே பங்குகொண்டு, அச்சமின்றி சிறை சென்ற ஓர் உணர்வு படைத்தவர் நீங்கள். நல்ல இலக்கியவாதி, நல்ல சிந்தனையாளர், நல்ல எழுத்தாளர். அதற்கும் மேலாகச் சொல்ல வேண்டுமென்றால் நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத்திலும் இருந்து அதனுடைய விதிகளைப் பின்பற்றி அமைச்சரவையிலே இடம் பெற்ற, மக்களது சேவையிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, ஆளுகின்ற கட்சிகள், எதிர்க்கட்சிகள், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய கடமை என்னவென்று நன்கு அறிந்த ஒருவ்ரை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினத்திலே அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்த மன்றத்திற்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. எனக்கு முன்னால் நம்முடைய பேராசிரியர் அவர்களும், அவை முன்னவரும் குறிப்பிட்டதைப் போன்று, திரு. சிவசண்முகம் பிள்ளை, இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய செங்கோலை வளையாமல் எந்த அளவிற்கு அவர் பாதுகாத்தார் என்பது ஒரு வரலாறு. அந்தக் காலத்திலே நான் சட்டமன்ற உறுப்பினராக இல்லாவிட்டாலும், பழைய நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்க்கும்போது ஒன்றைச் சொல்லலாம். எதிர்க்கட்சி ஆளுங்கட்சியைப் பார்த்துப் பேசும்போது, முதலமைச்சர் எழுகிறார். 'இல்லை, நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன் பதில்' என்று சொன்ன சிவசண்முகம் பிள்ளை இந்த மன்றத்தின் இறையாண்மையை மிகவும் பாதுகாத்து வந்திருக்கிறார். அவ்வாறுதான் சிவசண்முகம் பிள்ளைக்கு மிகப் பெரிய பெருமையை இந்த மன்றம் தேடித் தந்திருக்கிறது.

குறிப்பாக, இந்த மன்றம் உங்களுக்குத் தெரியாதது அல்ல, அறியாதது அல்ல. ஆளும் கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பதட்டத்தை உருவாக்க நினைக்கின்றபோதெல்லாம் எந்தவிதச் சூழ்நிலையிலேயும் அதைத் தணிக்கின்ற மிகப்பெரிய பொறுப்பு உங்களிடத்திலே இருக்கிறது. நீங்கள்





ஏற்றிருக்கிற அந்தப் பொறுப்புக்கேற்ப ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்களாக இருந்து, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல், சமநீதி காத்து, இந்தச் சபையை நடத்தக்கூடிய வல்லமை உங்களிடத்திலே இருக்கிறது. நீங்கள் ஏற்றிருக்கின்ற பொறுப்புக்கு வானளாவிய அதிகாரம் இருந்தாலும்கூட, அவையினுடைய கண்ணியத்தைக் காப்பதிலே மிகுந்த அக்கறை செலுத்தக்கூடியவர் நீங்கள். இந்த மன்றத்தில் மிகவும் நல்ல அனுபவம் மிக்க ஒருவரை, இந்தச் சபையினுடைய தலைவராக தேர்ந்தெடுத்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உங்களுக்கு இணையாக திரு. அருணாசலம் அவர்கள் துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவரும் இந்த மன்றத்தினுடைய இறையாண்மையைக் காத்து செயல்படுவார். நீங்கள் இருவரும் தொடர்ந்து செயல்பட வேண்டுமென்று கேட்டு, உங்களைப் பாராட்டி, வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். ராஜா அவர்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் அனைத்துக் கட்சிகளின் சார்பாக ஏகமனதாக தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இதிலிருந்தே அனைத்துத் தரப்பினருடைய, அனைத்துக் கட்சிகளுடைய நம்பிக்கையையும் பெற்று, அவர்களுடைய மரியாதைக்குரியவராகவும் தாங்கள் அமைந்திருக்கிறீர்கள் என்பது மிகப் பெரிய பாராட்டத்தக்க ஒரு விஷயமாகும்.

பாராளுமன்ற முன்னாள் துணை சபாநாயகர் திரு. சூரஜ்பான் அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். தன்னுடைய நண்பரது வீட்டிற்குச் சென்றிருந்தபோது, அவருடைய குழந்தையிடம், 'இவர் யார் என்று தெரிகிறதா?' என்று கேட்டபோது, 'தெரிகிறதே, இவர்தான் Head Master-ஆக இருக்கிறார்' என்று அந்தக் குழந்தை சொன்னதாம். அதாவது, பாராளுமன்றத்திலே உறுப்பினர்கள் அனுமதியில்லாமல் எழுந்து, எழுந்து பேச முயற்சிக்கும்போது, 'Please sit down, sit down' என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாரே என்று சொன்னதாம். நீங்கள் இங்கே சட்டமன்றத்தைச் சிறப்பாக, முறையாக, நல்ல முறையிலே நடத்துகின்ற பொறுப்பிலே இன்றையதினம் அமர்ந்திருக்கிறீர்கள். இதற்கான

[திரு. எச். ராஜா] [2001 மே 24

அனைத்துத் தகுதிகளும் பெற்றவராக தாங்கள் அமைந்திருக்கிறீர்கள். தங்களோடு நெருங்கிப் பழகி செயலாற்றுகின்ற வாய்ப்பு பெற்றவன் என்ற முறையிலே, தங்களுடைய மென்மையான அன்பான நட்பும், அறிவாற்றலும் தாங்கள் இந்தப் பொறுப்பிற்கு மிகவும் பொருத்தமானவர் என்பதை நிச்சயமாக எடுத்துக்காட்டுகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், சிறிய கட்சியாக இருப்பவர்களுக்கும் தாங்கள் முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய கருத்துக்களை இங்கே பிரதிபலிப்பதற்கு உதவிட வேண்டுமென கேட்டிருக்கிறார்கள். எப்போதுமே அதை நான் சொல்லி வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. காரணம், ஒரு தாய்க்குப் பல குழந்தைகள் இருந்தால் பலவீனமான குழந்தைகளின் மீதுதான் அந்தத் தாய்க்கு பற்றும், பாசமும் அதிகம் இருக்கும். அதற்குத்தான் ஊட்டச்சத்து அதிகமாகக் கொடுத்து முக்கியத்துவம் கொடுப்பார்கள். அதுபோல நீங்கள் அன்பாகப் பழகுகின்ற தாயுள்ளம் கொண்டவர் என்கின்ற காரணத்தாலே சிறிய கட்சிகளுக்கும் கருத்துக்களின் அடிப்படையிலே முக்கியத்துவம் கொடுப்பீர்கள் என்பதிலே எனக்கு இருவேறு கருத்துக்கள் கிடையாது.

இன்றையதினம் ஏகமனதாகப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற தங்களுக்கும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்களுக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் சார்பாகவும், பாரதீய ஜனதா கட்சியின் சார்பாகவும் எங்களுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையிலே இடம் பெற்று நான் இங்கே பேசுவதற்கு காரணகர்த்தாவாக இருந்த நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளர்களுக்கும், எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் புரட்சித் தளபதி திருநாவுக்கரசு அவர்களுக்கும் நான் முதலிலே நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 மே 24] [திரு. ஆஸ்டின்]

பன்னிரண்டாவது சட்டமன்றப் பேரவையினுடைய பேரவைத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள தங்களுக்கு, ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள தங்களுக்கு, என் சார்பிலும், நான் சார்ந்திருக்கின்ற இயக்கமான எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், என்னுடைய இதயபூர்வமான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டமன்றப் பேரவை வரலாறு படைத்த பேரவையாகும். எனக்கு முன்னால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர். பி. அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நீங்கள் அமர்ந்திருக்கின்ற அந்த ஆசனம் அதைவிட வரலாற்றுச் சிறப்புடையதாகும். அந்த ஆசனத்திலே, இருக்கையிலே மரியாதைக்குரிய திரு. சாம்பமூர்த்தி அவர்கள், திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், திரு. கோபால மேனன் அவர்கள், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்கள், திரு. செல்லப்பாண்டியன் அவர்கள், திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள் போன்ற தலைவர்கள் எல்லாம் சட்டப் பேரவைத் தலைவர்களாக அமர்ந்து நடுநிலையோடும்; கண்ணியத்தோடும் இந்தப் பேரவையை நடத்திய வரலாறு உண்டு.

முற்பகல் 10—55

அதைப்போன்று அவர்களுடைய நல்ல செயல்பாடுகளை முன்னுதாரணமாக நீங்கள் எடுத்துக்கொண்டு இந்தச் சபையிலே ஜனநாயகத்தைக் காக்கும் வண்ணம் சிறப்பாக இந்தச் சபையை நீங்கள் நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

பேரவைத் தலைவராகிய நீங்கள், திராவிட இயக்கத்தினுடைய மூத்தத் தலைவர்களில் ஒருவர். திராவிட இயக்கத்தினுடைய தலைவர்கள் பலராலும் நீங்கள் உருவாக்கப்பட்டு பாராட்டப்பட்டவர்கள். குறிப்பாக, மறைந்த மாமேதை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது முழுமையான அன்புக்குப் பாத்திரமாக நீங்கள் விளங்கியவர்கள். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அமைச்சரவையிலே பல ஆண்டு காலம் நீங்கள் பல்வேறு துறைகளினுடைய அமைச்சராக இருந்து சட்டமன்றத்தினுடைய அனுபவத்தை நீங்கள் பெற்றவர்கள்.

தமிழகத்திலே உள்ள தலைசிறந்த தமிழ் அறிஞர்களிலே நீங்களும் ஒருவர். அதுமட்டுமல்லாமல், மாணவப் பருவத்திலேயிருந்து நீங்கள் அரசியலில் உங்களை ஈடுபடுத்திக் கொண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே சிறை சென்ற மொழிப் போர்த் தியாகிகளிலே நீங்களும்

ஒருவர். இத்தனைக்கும் மேலாக எல்லோரிடத்திலும் சமமாக, இனிமையாகப் பழகக்கூடிய நல்ல பண்பாளர் நீங்கள். இத்தனைச் சிறப்புகள் பெற்ற நீங்கள் இந்த அவையினுடைய தலைவராக இன்றைக்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றீர்கள். இந்த அவையை நீங்கள் சிறப்பாக நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை, எதிர்வரிசையிலே இருக்கின்ற எங்களுக்கு இருக்கின்றது.

இன்றைக்கு கோடிக்கணக்கான தமிழ் மக்களுடைய உணர்வுகள், எண்ணங்களை எல்லாம் பிரதிபலிக்கக்கூடிய சபையாக இந்தச் சட்டமன்றம் இருக்க வேண்டும். மிகப் பெரிய எதிர்பார்ப்புகளோடு நம்மை எல்லாம் அவர்கள் இந்த மன்றத்திற்கு, அவர்களுடைய குரலை எழுப்புவதற்காக, அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிப்பதற்காக அனுப்பி வைத்திருக்கிறார்கள். எனவே, அவர்கள் எல்லாம் ஏமாற்றம் அடையாத அளவிற்கு இந்தச் சபையிலே அவர்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலே அத்தனை உறுப்பினர்களுக்கும் இங்கே முழுமையான கருத்துச் சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தாங்கள் ஒரு கட்சியினுடைய சார்பிலே தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும்கூட இந்த ஆசனத்திலே அமர்ந்து, இந்தச் சபையினுடைய தலைவராக ஒருமனதாக தேர்வு செய்யப்பட்ட பின்னாலே அனைவரையும் நீங்கள் ஒன்று போல மதித்து, ஒன்று போல பாரபட்சமின்றி கருதி இந்தச் சபை சிறப்பாகச் செயல்படக்கூடிய அளவிலே, கண்ணியத்தைக் காக்கும் வகையிலே நீங்கள் பணியாற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

மாண்புமிகு இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் 1989 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இங்கே அமர்ந்து அன்றைய தினத்திலே சட்டப் பேரவையின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்ட மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்களை வாழ்த்துகின்றபோது வாழ்த்தியதை நான் இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். "இந்த மாமன்றத்திலே முந்தைய வரலாற்றில் உள்ள நல்லவைகளை மட்டும் எடுத்துக்கொண்டு தீயவைகளை மறப்பதோடு, மறப்பதோடு மட்டுமல்லாமல், அந்தத் தீயவைகள் மீண்டும் இந்த மன்றத்திலே நுழையாமல் காப்பாற்றுகின்ற ஜனநாயகக் கடமை தங்களுக்கு இருக்கின்றது. இந்த மன்றத்தில் நல்லவைகளே நடைபெற வேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். இதுதான் தமிழ் குடிமக்களின் ஆசை" என்று அன்றைய எதிர்க்கட்சித்



தலைவராக இருந்து அன்றைய சபாநாயகரை வாழ்த்தியது போல், இன்று முதலமைச்சராக இருந்து தங்களை வாழ்த்துவதாக எடுத்துக்கொண்டு, தீயவைகள், கசப்பான அனுபவங்கள் இந்த அவையிலே நுழையாதவாறு ஜனநாயகம் தழைத்தோங்கும் வகையில் சிறப்பாகச் செயல்பட்டு, வருங்காலத்திலே ஒரு எடுத்துக்காட்டான சபாநாயகர் என்று வரலாற்றிலே இடம் பெறக்கூடிய அளவிலே நீங்கள் செயல்பட வேண்டுமென்று உங்களை மீண்டும் நான் வாழ்த்தி, இந்தச் சபையினுடைய கண்ணியத்தையும், மரபுகளையும் பேணிக் காக்கும் வகையிலே உங்களோடு எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் முழு அளவிலே ஒத்துழைக்கும் என்ற உறுதியையும் இந்த நேரத்திலே உங்களுக்குத் தருகின்றேன்.

இங்கே துணை சபாநாயகராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற மாண்புமிகு வரகூர் அருணாசலம் அவர்கள் ஏற்கெனவே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுடைய அமைச்சரவையிலே அமைச்சராக இருந்து சட்டமன்ற அனுபவங்களைப் பெற்றவர். அவர் உங்களுக்கு உறுதுணையாக இருந்து சட்டமன்றத்தினுடைய கண்ணியத்தையும் மரபுகளையும் காத்திட வேண்டுமென்று கேட்டு, அவரையும் என் சார்பிலும், எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் வாழ்த்தி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

(முற்பகல் 11–00)

* **திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலில் தமிழகத்தின் மக்கள் மிகத் தெளிவான சிந்தனையோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணியிலே பங்கு கொண்டிருந்த மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சிகள் அனைத்திற்கும் மிகப் பெரிய வெற்றியினைத் தந்ததோடு, அதனுடைய தலைமைக் கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறுதிப் பெரும்பான்மையை, வெற்றியைத் தந்த தமிழ் மக்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலட்சோப இலட்சம் தொண்டர்களைக் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் அவைத் தலைவராக இருந்த தங்களை இன்றைக்கு தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்தமான

எண்ணங்களையும் கருத்துக்களையும் பிரதிபலிக்கின்ற இந்த மாமன்றத்திற்கு, பதிவு செய்கின்ற இந்த மாமன்றத்திற்குத் தலைவராக நியமித்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், ஒருமனதாகத் தேர்வு செய்வதற்கு ஒத்துழைப்பு தந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்று வள்ளுவன் சொன்ன வாக்குப்படி, தங்களை இந்த அவையினுடைய தலைவராகப் பார்க்கின்ற அந்தப் பெருமையை பெறுகின்றபோது, நான் உண்மையிலேயே, அந்தத் தாய் உள்ளத்தோடு மகிழ்ச்சியை எய்துகிறேன். காரணம், தாங்கள் நான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற எங்களது இயக்கத்தின் தலைவராக இருந்த தேசியத் தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்கள்; இளம் வயதிலேயே 'மேடை மணி' என்று புகழப்படுகின்ற அளவிற்கு ஒரு பெருமையைச் சேர்த்தவர்கள். அதை இங்கு எஸ்.ஆர்.பி. அவர்கள்கூட சுட்டிக்காட்டினார்கள். நேற்றைக்கு ஒரு மாலைப் பத்திரிகையில்கூட தங்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிடுகிற நேரத்தில் 'பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரால் பாராட்டப்பெற்றவர் காளிமுத்து, அவர் இந்தப் பொறுப்புக்கு மிகவும் தகுதியுடையவர்' என்று எழுதப்பட்டிருந்தது. எனவேதான், நான் அந்த தேவர் வழியிலே, அவருடைய இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கின்றவன் என்கின்ற முறையில், இந்தப் பெருமை உங்களைச் சேர்ந்ததற்கு மிக மகிழ்ச்சி அடைகிறேன்.

'Full many Gems are born beneath the ocean' என்று சொல்வார்கள். ஆழ் கடலுக்கு அடியிலேதான் முத்து இருக்கிறது. ஆழ்கடலின் உள்ளே இருக்கிறவரைக்கும் அது சிப்பிதான். அதை வெளியிலே கொண்டு வந்து மக்களுக்கு, உலகத்திற்குக் காட்டுகின்றபோதுதான் அது முத்து, நல்முத்து என்ற பெயர் பெறுகிறது. அதுபோல இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உங்களை ஆழ்கடலிலேயிருந்து வெளியே கொண்டு வந்து, நல்முத்தாக, காளிமுத்தாக இந்த அவையிலே (மேசையைத் தட்டும் ஒலி) அமர வைத்திருக்கிறது. அதற்காக அந்த இயக்கத்தினுடைய தலைவிக்கும் இந்த மாநிலத்தின் முதலமைச்சருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உளப்பூர்வமான பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இங்கு குறிப்பிட்டவர்கள் எல்லாம் இந்த அவையினுடைய மரபையும் மாண்பையும் மிகத் தெளிவாகவே எடுத்துச் சொன்னார்கள்.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவனுக்கோர் குணமுண்டு"

என்பதுபோல இந்தத் தமிழனுக்கும், தமிழர்கள் வீற்றிருக்கின்ற இந்த மன்றத்திற்கும் பல்வேறு சிறப்புகள் உண்டு. பல்வேறு அறிஞர்கள் இந்த அவையை அழகு செய்திருக்கிறார்கள். இந்த அவையைப் பாராட்டுகின்ற அளவிற்கு நடத்தினார்கள் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். நிச்சயமாக என்னைப் பொறுத்த அளவிலே நீங்கள் இந்த அவையை இதற்கு முன்னால் நடத்தியவர்களைக் காட்டிலும் மிகச் சிறப்பாக தமிழக மக்களே பாராட்டுகின்ற அளவிற்கு நடத்துவீர்கள்; அந்த அளவிற்குத் தமிழ் எண்ணம் உங்களுக்கு உண்டு; தமிழ்ப் பாண்டித்தியம் உங்களுக்கு உண்டு என்பதை நான் நன்கு அறிவேன். எனவே, நீங்கள் இந்த அவையை நடத்துகின்றபோது, நிச்சயமாக இந்தத் தமிழ் மக்களே பாராட்டுகின்ற அளவிற்கு இருக்கும்.

"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்"

என்று சொல்வதுபோல உங்களைப் பெறுவதற்கு, சாதாரணமான இராமுத்தேவன்பட்டி என்கின்ற குக்கிராமத்திலே பிறந்து இன்றைக்கு தமிழக மக்களெல்லாம் புகழ்கின்ற அளவிற்கு ஒரு வாய்ப்பினை பெற்றிருக்கின்ற தங்களைப் பெற்றதற்கு உங்களுடைய தாய், தந்தை என்ன தவத்தைச் செய்தார்களோ என்று இந்த உலகமே வியக்கின்ற அளவிற்கு இந்த அவையை நடத்திச் செல்ல வேண்டுமென்று சொல்லி என்னுடைய உளப்பூர்வமான வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

அடுத்து, உங்களோடு துணைத் தலைவராக இங்கே தேர்வு பெற்றிருக்கின்ற தம்பி அருணாசலம் அவர்களும் உங்களோடு ஒன்றாக இணைந்து பிணைந்து இந்த அவையைச் சிறப்புற நடத்த வேண்டுமென்று என்னுடைய உளப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள்.

[2001 மே 24

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களை வாழ்த்துவதற்கு ஒரு வாய்ப்பைத் தந்த என்னுடைய இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு இந்த நல்ல நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நீங்கள் அமர்ந்திருக்கின்ற இந்த ஆசனத்திலே மாண்புமிகு மறைந்த சி.பா. ஆதித்தனார் அவர்கள், மரியாதைக்குரிய ஐயா செல்லப்பாண்டியன் அவர்கள் போன்றவர்களெல்லாம் அமர்ந்து இந்தச் சட்டமன்றத்தினுடைய மரபையும் கண்ணியத்தையும் காத்தார்கள் என்பதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். நீங்கள் மிகச் சிறு வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்றுகொண்டு, தமிழின்மீதும், திராவிட மக்கள் மீதும் தணியாத பாசம் கொண்டு கடுமையாக உழைத்தீர்கள். சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்று அரும்பெரும் பணிகளை ஆற்றிய நீங்கள், மாண்புமிகு மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் அமைச்சராகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றினீர்கள். நாடாளுமன்றத்திலேயும் மிகச் சிறந்த பணியாற்றிய நீங்கள், மேடையிலே பேசினால் எல்லோரையும் கவர்ந்திழுக்கின்ற வண்ணம் அருமையாகப் பேசுவீர்கள். உங்களுடைய 'கருவாடு மீன் ஆகாது', 'கறந்த பால் மடி புகாது' என்ற வார்த்தைகள் எல்லாம் எங்கள் மனதைவிட்டு இன்னும் நீங்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவில் சிரிக்கவும், சிந்திக்கவும் வைக்கின்ற நல்ல ஆற்றல் படைத்தவர்கள்.

அப்படிப்பட்ட உங்களை,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவருடைய வாக்கிற்கிணங்க, நம்முடைய தமிழக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தேர்ந்தெடுத்து இந்த ஆசனத்திலே அமர வைத்திருப்பது சாலப் பொருத்தமானது என்று கூறிக்கொள்கிறேன். நீங்கள் உங்கள் பணியைச் சிறந்த முறையிலே ஆற்றுவீர்கள்; சீரிய முறையிலே நடுநிலையோடு நீதி தவறாமல் இந்தச் சட்டமன்றத்தை நடத்த வேண்டும், நடத்துவீர்கள் என்று கூறி உங்களை என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக இந்த நல்ல நேரத்திலே வாழ்த்துவதோடு, துணை சபாநாயகராக இருக்கின்ற மாண்புமிகு நம்முடைய வழக்கறிஞர் அருணாசலம் அவர்களையும் இந்த நல்ல நேரத்திலே வாழ்த்தி உங்களுடைய பணி சிறக்க என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை மீண்டும் ஒரு முறை கூறி, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.



2001 மே 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

**மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை தங்களை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து தங்களை வாழ்த்துகின்ற, பாராட்டுகின்ற வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மக்களாட்சித் தத்துவத்தின் அறப் பண்புகள் மிளிரும் இடம் சட்டமன்றப் பேரவை ஆகும். மக்கள் பிரதிநிதிகள் மக்களின் எதிர்பார்ப்புகளைத் தெரிவிக்கிற இடமும் இதுதான். நிர்வாகத் துறை அதற்குப் பதில் அளிக்கும் இடமும் இதுதான். மாநிலத்தின் ஒட்டுமொத்த உணர்வுகளை எடுத்துரைக்கிற இந்த அவைக்குத் தலைமை ஏற்பது என்பது மகத்தான பொறுப்பாகும். அவைத் தலைவர் பொறுப்பு என்பது எப்படிப்பட்டது என்பதற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்ததைக் கூற விரும்புகிறேன். "திராவிட இயக்கத்தின் தாரக மந்திரமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் சீரிய கோட்பாடுகளுக்கு இது பெருமை சேர்க்கின்ற பணியாகும்" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள். அவையை நடத்தப் போகிற சீரிய கடமையில் கண்ணியத்தை மிளிரச் செய்வதும், கட்டுப்பாட்டைக் காப்பதும், பிறரை கட்டுப்பாட்டைக் காக்க வைப்பதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல பேரவைத் தலைவரின் மிகப்பெரும் பொறுப்பாகும். மதிப்புமிக்க பேரவையின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவராகவே மாண்புமிகு பேரவைத் தலைவரை உறுப்பினர்கள் எப்போதும் கருதுவார்கள். எந்த நேரத்திலும், எப்படிப்பட்ட தருணத்திலும் அவையின் மாண்பைப் பாதுகாப்பதில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உறுதியோடு செயலாற்ற வேண்டும்.

முற்பகல் 11–10

அவைக்கு என்று இருக்கும் மரபுகளையும், நெறிமுறைகளையும் விட்டுக்கொடுக்காமல், கட்டிக்காக்க வேண்டிய மிகப் பெரிய கடமையும், பொறுப்பும் பேரவைத் தலைவருக்கு உண்டு. அத்தகைய அருங்குணங்களைக் கொண்ட சான்றோர்கள், திரு. சாம்பமூர்த்தி அவர்கள், திரு. சிவசண்முகம் பிள்ளை அவர்கள், திரு. கோபால மேனன் அவர்கள், திரு. யு. கிருஷ்ணா ராவ் அவர்கள், திரு. செல்லப்பாண்டியன் அவர்கள் போன்ற பெரியோர்கள் அவைத் தலைவர்களாக சிறப்புறப்

பணியாற்றி இந்த அவையை அலங்கரித்துள்ளார்கள். இந்த மாண்புமிகு அவையில்—அதாவது 6—வது, 7—வது, 8—வது சட்டமன்றப் பேரவையின் — உறுப்பினராகத் திறம்படப் பணியாற்றி அனைவருடைய அன்பையும் கவனத்தையும் ஈர்த்த தாங்கள் ஒருமனதாக தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். மாண்பு மிகுந்த இந்த அவையின் தலைவராகத் தாங்கள் பொறுப்பேற்றிருப்பது எனக்கு மிகுந்த பேருவகையை அளிக்கிறது.

எதையும் தெளிவான கண்ணோட்டத்தோடு அணுகும் தாங்கள், அவை மரபுகளை கட்டிக் காத்து சிறப்புற திறம்படப் பணியாற்றுவீர்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. மக்கள் நலம் சார்ந்த பிரச்சினைகள் குறித்து இந்த அவையில் கடந்த காலங்களில் நடைபெற்ற விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினராகவும், மாண்புமிகு அமைச்சராகவும் பங்கேற்ற அனுபவம் தங்களுக்கு நிரம்பவே உண்டு. சமன்செய்து சீர்தூக்கும் சாமர்த்தியமும், அவையைச் சார்ந்து நிற்கும் நடுவுநிலைமையையும் தாங்கள் இயல்பாகவே பெற்றிருக்கிறீர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

இங்கே எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் பேசுகின்றபோது, கடந்த காலங்களில் இங்கிலாந்து நாட்டில் Speaker ஆக மக்களவைக்குத் தலைமையேற்று இருப்பவரை இழுத்துச் சென்று ஆசனத்தில் அமர வைக்கிற பழக்கம் இருந்தது என்று குறிப்பிட்டார். ஆனால் அந்தப் பழக்கத்திற்கான காரணத்தை முழுமையாக எஸ்.ஆர்.பி. அவர்கள் விளக்காமல் விட்டு விட்டார். மீதியை இங்கே சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தக் காலத்தில் அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவைத் தலைவரை அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர வைக்கிறார்கள். ஆனால் முன்பு இங்கிலாந்து நாட்டில் மன்னராட்சிக் காலத்தில், House of Commons என்ற ஒன்று இருந்தது. அதில் சாமானிய மக்கள், மக்கள் பிரதிநிதிகளாக இடம் பெறுவார்கள். அவர்கள் மன்னரைப் பார்க்க முடியாது. மக்களின் விருப்பங்களை, எதிர்பார்ப்புகளை மன்னரிடம் தெரிவிக்க முடியாது. அதற்காகத்தான் House of Commons—ல் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்தத் தலைவரைத்தான் Speaker என்பார்கள். ஏனென்றால், மக்களின் விருப்பங்களை, எண்ணங்களை, மக்கள் பிரதிநிதிகள் என்ன





சொல்கின்றார்கள் என்பதை அவர்தான் மன்னரிடத்தில் சென்று சொல்ல வேண்டும், எடுத்துரைக்க வேண்டும். அதற்காகத்தான் அவருக்கு Speaker என்ற பெயரை வைத்தார்கள். அந்த Speaker மன்னரிடம் போய், மன்னருக்குப் பிடிக்காத கருத்துக்களைச் சொல்கின்றபோது, மக்கள் என்ன நினைக்கின்றார்களோ அதை ஒளிவு மறைவு இன்றி சொல்கின்றபோது, மன்னருக்குப் பல நேரங்களில் கோபம் வந்துவிடும். அந்தக் காலத்தில் மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் மன்னருக்கு உண்டு. பல நேரங்களில் அவைத் தலைவராக இருந்தவர் தலையையே இழந்த வரலாறும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அந்தக் காலத்தில் Speaker ஆக இருக்க யாருமே விரும்ப மாட்டார்கள். (சிரிப்பு) கோடிப் பொன் கொட்டிக் கொடுத்தாலும் Speaker பதவி வேண்டாம் என்று ஓடிவிடுவார்கள் (சிரிப்பு). ஆனால், யாரோ ஒருவர் Speaker ஆக இருந்தாக வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் Speaker—ஐ இழுத்துச் சென்று ஆசனத்தில் வலுக்கட்டாயமாக அமர வைத்தார்கள். அப்படித்தான் அந்தப் பழக்கம் வந்தது. ஆனால் இன்று அத்தகைய நிலைமை இல்லை. இன்று நாம் ஜனநாயக மரபுகளைக் கடைப்பிடிக்கிறோம். ஆகவே, அனைவருடைய ஒத்துழைப்பையும் பெறுவதில் உங்களுக்கு எந்தச் சிரமமும் இருக்காது என்று நான் கருதுகிறேன்.

சில சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"Remember, not only to say the right thing at the right time but to leave unsaid the wrong thing at the tempting moment"

இதைத் தாங்கள் இயல்பாகவே கற்றறிந்தவர் என்று நான் கருதுகிறேன். சரியான சொல்லை சரியான நேரத்தில் சொல்வது எவ்வளவு முக்கியமோ, அதைப்போலவே, தவறான சொல்லைச் சொல்ல வேண்டுமென்று உள்ளம் நம்மைத் தூண்டுகின்றபோது, சொல்லாமல் விடுவது அவ்வளவு முக்கியமாகும்.

முற்பகல் 11—15

அவையின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் பேணிக் காப்பதில் மாண்புமிகு உறுப்பினர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதில் தாங்கள் வெற்றி பெறுவீர்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். பெருமைமிக்க பேரவைத் தலைவராகத் தாங்கள் உயர்ந்து விளங்க என் நல்வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அன்புச் சகோதரர் வரகூர் அருணாசலம் அவர்கள், இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றி இருக்கிறார்கள். இந்த அவையின் மரபுகளையும், நெறிமுறைகளையும் நன்றாகத் தெரிந்தவர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக திரு. அருணாசலம் அவர்கள் சிறப்புறப் பணியாற்ற என் நல்வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களும் பேசுகிறபோது, சிறிய கட்சிகளுக்கு, அதாவது சிறிய எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகளுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள்.

"தினை விதைத்தவன் தினை அறுப்பான்;
வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

என்று சொல்வார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களைப் பொறுத்தவரை, ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை உடையவர்கள் நாங்கள். எங்களிடம் இருந்துதான் நீங்கள் வந்து, இப்போது மாண்புமிகு பேரவைத் தலைவராக அமர்ந்திருக்கிறீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களும், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் நமக்குக் கற்றுத் தந்த நெறிமுறைகளை, சீரிய பண்புகளை என்றைக்குமே நாம் மறந்ததில்லை; நீங்களும் மறக்க மாட்டீர்கள். ஆகவே, ஒரு சிலருக்கு தாங்கள் கடந்த காலத்தில் நடந்துகொண்ட விதங்களை நினைவுகூரும்போது, ஓர் அச்ச உணர்வு ஏற்படலாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஏற்கெனவே நான் சொல்லி இருப்பதுபோல, இந்த அவையிலும் பேசியிருப்பது போல, நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும் என்பதில் திடமான நம்பிக்கை உடையவள் நான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பாதுகாப்பைப் பற்றி, பாதுகாப்பு கிடைக்குமோ, இல்லையோ என்பதைப் பற்றி, யாரும் இந்த அவையில் அச்சப்பட வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் நம்புகிறேன்.

ஒரு கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கு, உடன்பிறப்புகளுக்கு அவைத் தலைவராக இருந்த தங்களை, இன்றைக்கு நாட்டிற்குத் தாரை வார்த்துக் கொடுத்திருக்கிறேன். ஒரு கோடி கழகத் தொண்டர்களுக்கு அவைத் தலைவராக இருந்த தாங்கள், இன்றைக்கு ஆறு கோடிக்கும் மேற்பட்ட மக்களின் பிரதிநிதிகளுக்கு அவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெண்ணை தாரை வார்த்துக் கொடுத்து, புகுந்த வீட்டிற்கு அனுப்பும்போது ஒரு தாய்க்கு எத்தகைய உணர்வுகள் இருக்குமோ அத்தகைய உணர்வுகளை இப்போது நான் அனுபவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்குத் தாயாக இருக்கக்கூடிய வயது எனக்கு இல்லை என்றாலும், தங்களுக்கு தாய் ஸ்தானத்திலிருந்து,



"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்ற உணர்வோடு, இதுவரை இந்த அவையில் வீற்றிருந்து இந்த அவையை அலங்கரித்த எல்லா பேரவைத் தலைவர்களையும்விட தலைசிறந்தவர் என்ற பெயரையும் புகழையும் பெறவேண்டும் என்று வாழ்த்தி, மீண்டும் ஒரு முறை துணைத் தலைவர் வரகூர் அருணாசலம் அவர்களையும் வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களை நன்றி கூற அழைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் பேரவையில் எனக்குத் துணைத் தலைவராகப் பணியாற்றுகிற வாய்ப்பை நல்கிய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியும், சமூக நீதி காத்த வீராங்கனையும், வெற்றி வரலாறு படைத்துக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர், அன்னை புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைப் பொற்பாதங்களிலே காணிக்கையாக்கிக் கொள்கிறேன். இந்த மாண்புமிகு பேரவையினுடைய அவை முன்னவர் அவர்களே, இந்தப் பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, இங்கே வாழ்த்திப் பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பேரவையினுடைய மாண்பையும் இறையாண்மையையும் கட்டிக் காக்கின்ற வகையில் விருப்பு வெறுப்பின்றி என்னுடைய பணியை ஆற்றுவேன் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் இங்கே உறுதியாகத் [illegible] கடமைப்பட்டிருக்கின்றேன்.

————

V2'',31'801 801.1.2 222385

[திரு. அ. அருணாசலம்] [2001 மே 24

*முற்பகல் 11—20*

அதேபோல, இந்த மாண்புமிகு பேரவையினுடைய தலைவராக மாண்புமிகு பேரவைத் தலைவர் பணியாற்றுகின்ற நேரத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்து இணைந்து பணியாற்றுவேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நல்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த என்னுடைய இதய தெய்வம், தமிழகத்தினுடைய முதலமைச்சர் அன்னை அவர்களுக்கு மீண்டும் நன்றி சொல்லி, என்னை ஏகமனதாகத் தேர்ந்தெடுத்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கொணாத சோதனைகளையும், வேதனைகளையும் ஏற்று புடம்போட்ட தங்கமாக, ஏளனத்தை ஏணியாக்கி, அவமானத்தை அஸ்திவாரமாக்கி, வாழ்க்கையை வரலாறாக்கிக் காட்டி, இழந்துவிட்ட சிம்மாசனத்திலே அழுத்தமாக, கம்பீரமாக அரிமா போல் அமர்ந்திருக்கிற என் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) சான்றாண்மைமிக்க கட்சிகளின் தலைவர் பெருமக்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, என்னை ஏகமனதாக இந்தச் சட்டப் பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பெரும்பாலும், அவைத் தலைவர் அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசுகின்ற இந்தப் பேச்சுதான் கன்னிப் பேச்சும் கடைசிப் பேச்சும் என்று சொல்வது உண்டு. Speaker என்ற பெயர் இருந்தாலும் பேசுவதற்கான வாய்ப்பு Speaker-க்குக் கிடையாது. ஏன் அந்தப் பெயர் வந்தது என்பதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளக்கிச் சொன்னார்கள். **House of Commons** சொல்லுவதை மன்னரிடத்திலும், மன்னர் சொல்வதை அந்த அவையினிடத்திலும் வந்து சொல்லக்கூடிய காரணத்தால் அன்றைக்கு Speaker என்று பெயர் இருந்தது. இன்றைக்கு நான் கட்சியிலே நீண்டகாலமாக speaker-ஆக இருந்த காரணத்தாலோ என்னவோ, Speaker பதவிக்கு நான்தான் லாயக்கு என்று இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முடிவு செய்து, என்னை இந்தப் பொறுப்பிலே அமர வைத்திருக்கிறார்கள். இது நீண்டகாலமாகக் கடிவாளம் இல்லாமல் ஓடிய குதிரை, ஒரு கடிவாளத்தை மாட்டலாம் என்று இங்கே மாட்டியிருக்கிறார்கள். புலியைச் சைவமாக்குகிற வித்தை புரட்சித்



2001 மே 24] [பேரவைத் தலைவர்]

தலைவிக்குத்தான் தெரியும் என்பதை நான் எண்ணிப் பார்த்துப் பெருமைப்படுகிறேன்.

இந்த நாற்காலிக்கு உள்ள மகத்துவத்தைப் பற்றியெல்லாம் இங்கே பேசிய பெருமக்கள் சொன்னார்கள். 1921—ல் சென்னை இராஜதானியினுடைய ஆளுநராக இருந்த வில்லிங்டன் பிரபு அவர்களும் அவருடைய துணைவியார் லேடி வில்லிங்டன் அவர்களும் வழங்கிய நாற்காலி இந்த நாற்காலி. இதிலே அமரக்கூடியவர்கள் கண்ணியம் தவறாதவர்களாக, இந்த நாற்காலியின் கௌரவத்தைக் காப்பாற்றக்கூடியவர்களாக விளங்க வேண்டுமென்று அந்தப் பெருமகன் பேசிய பேச்சை நான் படித்துப் பார்த்தேன். ஆபுத்திரன் கையிலே இருந்த அமுதசுரபி நல்லவர்கள் கையிலே சேரட்டும் என்று சொன்னதைப் போல, இந்த நாற்காலிக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென்று கருதி, புரட்சித் தலைவி அவர்கள் என்னை இதிலே அமர்த்தி வைத்திருக்கிறார்கள்.

'அரியாசனத்தில் அரசரோடு என்னை
சரியாசனம் வைத்த தாய்'

என்று புலவர் ஒருவர் பாடுவார். இது சரியாசனம்கூட அல்ல, என் தாயைவிட உயர்ந்த ஆசனத்திலே அமர்த்தி வைத்த தாயை இந்த நேரத்திலே நான் நன்றியோடு எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தக் காலத்திலே Speaker-ஆக இருந்தவர்கள் தலையைக்கூட இழக்க வேண்டிய நிலைமை வந்திருக்கும் என்று முதல்வர் அவர்கள் பேசுகிறபோது சுட்டிக்காட்டினார்கள் என்பதை இப்போது நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*முற்பகல் 11—25*

எந்தப் பணியை என் தலைவி இட்டாலும், தலையையே இழக்கக்கூடிய பணியாக இருந்தாலும் அதைத் தலைகுனிந்து ஏற்றுக்கொள்வேன் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"நானா ரெனக்கெனவோர் ஞானவுணர் வேதுசிவம்
ஊனாடி நில்லா வுழி"

என்று வள்ளலார் பாடினார். ஆக, எந்தக் கட்சியின் சார்பாக நான் பெருமையைப் பெற்றேனோ, சிறப்பைப் பெற்றேனோ, கட்சியினுடைய அவைத் தலைவர் பொறுப்பைப் பெற்றேனோ, அந்தக் கட்சி என்னை

இந்தப் பீடத்திலே அமர வைத்து இருக்கிறது. எந்தக் கட்சி தேர்ந்தெடுத்து அமர வைத்தாலும், போட்டி என்று வரும்போது, வெற்றியோ, தோல்வியோ வரும் என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் போட்டியிடக்கூடிய நிலைமை, கடந்த காலத்திலே பேரவைத் தலைவர் பொறுப்புக்குப் போட்டியிட்டவர்களுக்கு இருந்து இருக்கிறது. இன்றைக்கு அந்த நிலைமையை உருவாக்காமல் ஏகமனதாக என்னைத் தேர்ந்தெடுத்ததிலே எதிர்க்கட்சிகளும் மகிழ்ச்சியோடு என்னை அங்கீகரித்து இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேராசிரியர் அவர்கள், நடுவுநிலைமை அதிகாரத்திலே இருந்து சில குறட்பாக்களை நினைவுபடுத்தினார்கள்.

"தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்.

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

கெடுவல்யான் என்பது அறிகதன் நெஞ்சம்
நடுஒரீஇ அல்ல செயின்.

கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி.

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின்."



இவைதான் நடுவுநிலைமை அதிகாரத்திலே உள்ள 10 குறட்பாக்கள். இந்தக் குறட்பாக்களை நான் பள்ளிப் பருவத்திலே மனப்பாடம் செய்து இருக்கிறேன் என்றாலும்கூட, இந்தக் குறட்பாக்களுக்குரிய ஆழ்ந்த பொருளை நான் இன்றைக்கு மனதிலே பதிய வைத்துக்கொள்கிறேன் என்பதை நான் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பெருமக்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நாற்காலி நடுவிலே போடப்பட்டிருப்பதற்கே காரணம், நடுவுநிலைமையோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதற்குத்தான். ஆனால், ஒன்றை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஜனநாயகத்திலே எண்ணிக்கை பலம்தான் எதையும் நிர்ணயிக்கக்கூடியது. அந்த எண்ணிக்கை பலத்தை மிகுதியாகப் பெற்ற காரணத்தினால்தான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற கட்சியாக அமர்ந்து இருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த எண்ணிக்கை பலம்தான் ஜனநாயகத்திலே மிக முக்கியம். அந்த எண்ணிக்கை பலத்திற்கு ஏற்றாற்போல்தான் வாய்ப்புக்களை வகுத்துக் கொடுக்க வேண்டும். அதுதான் நம்முடைய சட்டமன்ற விதிமுறை. அதைப்போல வாய்ப்புக்களை வகுத்துக் கொடுக்கக்கூடிய நிலைமை எனக்கு இருக்கிறது. ஆனால், அதே நேரத்திலே எதிர்க்கட்சிகளுக்குரிய வாய்ப்பைப் பறித்து விடுவேன் என்று தயவுசெய்து கருத வேண்டாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். ஆளுங்கட்சி கொதிக்கிற சோறு என்றால், எதிர்க்கட்சி பதம் பார்க்கிற அகப்பை என்று குறிப்பிட்டார்கள். அகப்பை இல்லாமல் கையை வைத்து பதம் பார்க்க முடியாது. உண்மைதான். ஆனால், அதேநேரத்தில் அகப்பை பதம் பார்க்க மட்டும்தான் பயன்பட வேண்டுமே தவிர, பானையை உடைக்கிற நிலைமையிலே அகப்பை ஈடுபடுமானால் (மேசையைத் தட்டும் ஒலி) பிறகு அகப்பையைப் பதம் பார்க்க வேண்டிய நிலைமை எனக்கு வரும் என்பதையும் நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் பீடத்திலே சிறப்புக்கும் பெருமைக்கும் உரிய பெருமக்கள் எல்லாம் அமர்ந்து இருந்தார்கள். ஆகவே, அவர்கள் அமர்ந்து இருந்த இந்த அரியணையிலே, இந்த நாற்காலியிலே என்னை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அமர வைத்து இருக்கின்றார்கள். மிகப் பெரிய பெருமையை எனக்குச் சேர்த்திருக்கிறார்கள்.

[பேரவைத் தலைவர்] [2001 மே 24

இங்கே நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றையதினம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கட்சியினுடைய உறுப்பினர்களுடைய கூட்டம் நடைபெற்றது. நான் சபாநாயகராக இன்றைக்குத்தான் தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால், நேற்று அந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கூட்டத்திலே கலந்து கொண்டேன். அதிலே தமிழகத்து முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை இந்த மன்றத்திலே சொல்வது மரபு இல்லையென்றாலும், இது அனைவருக்கும் பயன்படக்கூடிய ஒன்று என்கிற காரணத்தால் குறிப்பிட விரும்புகிறேன்.

அவர்கள் "'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்கிற இந்தத் தாரக மந்திரத்தை நம்முடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் எந்த நிலையிலும் தவற விட்டுவிடக் கூடாது" என்று குறிப்பிட்டார்கள். "அவையிலே கூச்சலுக்கோ, குழப்பத்திற்கோ காரணமாக நீங்கள் விளங்கக் கூடாது" என்று குறிப்பிட்டார்கள். "எவ்வளவு மனம் புண்படக்கூடிய வகையிலே பேசினாலும், அதற்கு ஜனநாயக முறைப்படி, நெறிப்படி, சட்டமன்ற விதிமுறைப்படி எழுந்து நீங்கள் பதில் சொல்ல வேண்டுமே தவிர, வேறு வகையிலே நீங்கள் ஈடுபடக் கூடாது" என்று அவர்கள் தெரிவித்தார்கள். அவர்கள் தங்கள் கட்சியினுடைய உறுப்பினர்களுக்குச் சொன்ன அந்த அறிவுரையை, அவரவர்கள் தங்களுடைய கட்சி உறுப்பினர்களுக்குச் சொன்னால், இந்த அவையை நடத்திச் செல்வதற்கு எனக்கு எந்தச் சிரமமும் இருக்காது என்பதை இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–30*

நம்முடைய முன்னாள் முதல்வர் அவர்கள் ஒரு கருத்தைக் குறிப்பிட்டு இருந்தார்கள். பத்திரிகையிலே பார்த்தேன். சட்டமன்றத்திலே உங்களுடைய role என்னவாக இருக்கும் என்று கேட்டதற்கு, எங்களுடைய உறுப்பினர்களை control பண்ணுவதுதான் எங்களுடைய role—ஆக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டு இருந்தார். ஆகவே, control பண்ணப்படவேண்டிய அளவுக்குள்ள நிலைமையில் அந்த உறுப்பினர்கள் வந்திருப்பார்கள் என்று நான் கருதவில்லை.



2001 மே 24] [பேரவைத் தலைவர்]

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வந்திருக்கின்ற உறுப்பினர்கள் பலபேர், என்னோடு பழைய பாசறையிலே பயின்றவர்கள், பக்குவம் பெற்றவர்கள், ஜனநாயகத்தை மதிக்கக்கூடியவர்கள். அவர்கள் இந்த அவையினுடைய நெறிமுறைகளை ஏற்று நிச்சயமாக நடந்துகொள்வார்கள் என்பதிலே எனக்கு எந்தவிதமான ஐயமும் இல்லை.

இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். விமர்சனங்களைச் சொல்லலாம். பொதுப் பிரச்சினைகளைச் சொல்லலாம். அந்தப் பொதுப் பிரச்சினைகளைச் சந்திப்பதற்கு முதலமைச்சர் அவர்களும் தயாராக இருக்கின்றார்கள். நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், ஐந்தாண்டுக் காலம் அவர்கள் சந்திக்காத சோதனைகளையா இனிமேல் சந்தித்துவிடப் போகிறார்கள்? ஆகவே, அவற்றையெல்லாம் அவர்கள் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அக்னியிலே குளித்து வந்தவர்களுக்கு வெந்நீரிலே குளிப்பது என்பது ஒன்றும் சிரமமான காரியமே இல்லை. ஆகவே, அதிலே எந்தப் பிரச்சினையும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னதைப் போல, சில முக்கியமான பிரச்சினைகள் — உழைப்பாளர் வர்க்கத்தினுடைய பிரச்சினைகள், பொதுப் பிரச்சினைகளைப்பற்றிப் பேசுவதற்கு நான் நிச்சயமாக உரிய இடத்தைத் தருவேன். அதிலே எந்தவிதமான சிக்கலும் அவர்களுக்கு ஏற்படாமல் நான் பார்த்துக்கொள்வேன் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்றை நம்முடைய உறுப்பினர் பெருமக்கள் அனைவருமே எண்ணிப் பார்க்க வேண்டும். தனித்தனிக் கட்சிகளாக இருந்தாலும் நமக்கென்று ஒரு பொது நோக்கம் இருக்கிறது. ஐந்து விரல்களும் தனித்தனியாக இருந்தாலும், ஐந்து விரல்களுக்கும் பொதுவானது உள்ளங்கை என்பதைப்போல நமக்கென்று ஒரு பொது நோக்கம் இருக்கிறது. அது தமிழகத்து மக்களுடைய வளர்ச்சி. ஏழையெளிய மக்களுடைய துன்பத்தைத் துடைப்பது. இந்தப் பொது நோக்கத்தை இந்த மன்றம் நிறைவேற்றுவதற்கு ஆளுங்கட்சி செயல்பாட்டைச் செய்யும். எதிர்க்கட்சிகள் அதற்குத் துணைபுரிய வேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்.

வீணையின் நரம்புகள் தனித்தனியாக இருந்தாலும், விரலாலே மீட்டுகின்றபோது, ஒரே இசை எழும்புவதைப்போல நரம் தனித்தனிக்

கட்சிகளாக இங்கே இருந்தாலும், மக்கள் நலத்திற்காக இங்கே அனைவரும் தங்கள் எண்ணங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கட்சியினுடைய அவைத் தலைவர் பொறுப்பிலிருந்து என்னை மாற்றி, புரட்சித் தலைவி அவர்கள், இந்தப் பேரவைத் தலைவர் பொறுப்பை வழங்கியிருக்கின்றார்கள். என் மகளை மணம் முடித்துக் கொடுக்கிறேன். புகுந்த இடத்திலே நல்ல முறையிலே நடந்து கொள்ளவேண்டுமென்று அவர்கள் தெரிவித்தார்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன், என்னதான் மணம் முடித்துக்கொடுத்தாலும், தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு எப்படி அறுந்து போகும் என்பதை நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ன இருந்தாலும், தாய், தாய்தான்; பிள்ளை, பிள்ளைதான். (மேசையைத் தட்டும் ஒலி) நான் உடல் நலம் சீர்பட்டு என்னுடைய கிராமத்திற்குச் சென்றபோது, வயது முதிர்ந்த என்னுடைய ஏழைத் தாய் ஒன்றைச் சொன்னதை இப்போதும் எண்ணிப் பார்க்கிறேன். நான் உன்னைப் பெற்றவளாக இருக்கலாம், ஆனால், உண்மையிலேயே உன்னுடைய கட்சியினுடைய தலைவிதான் உனக்குத் தாய், உனக்கு அம்மா என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பாசம் எந்தக் காலத்திலும் பங்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம். அதிலே இந்தப் பதவியின் காரணமாக அதற்குப் பங்கம் வரக்கூடிய நிலைமை வருமானால் நான் அப்போதே சொல்லிவிடுவேன், அம்மா அவர்களே, இந்தப் பொறுப்புக்கு வேறு ஒருவரை நியமித்துக்கொள்ளுங்கள், நான் உங்களுடைய தொண்டனாக இருந்தாலே போதும் என்று வந்து விடுவேன் என்பதை மட்டும் இந்தநேரத்திலே தெரிவித்து, இந்த அவையைச் சிறப்பாக நடத்துவதற்குக் கருத்துக்களைச் சொன்ன அனைத்துப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏகமனதாக என்னைத் தேர்ந்தெடுக்க ஒத்துழைத்த அனைத்துப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையைச் சீரோடும் சிறப்போடும் நடத்திச் செல்ல அனைத்துப் பெருமக்களும், ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்தவகையிலே உங்களுடைய ஒத்துழைப்பு கிடைக்கும் என்பதை நீங்கள் இன்றைக்குப் பேசிய வாழ்த்துரைகளில் இருந்து புரிந்துகொண்டு அனைவருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை, மீண்டும் நாளை (25—5—2001) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 11—33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

—ஏதுமில்லை—

222385

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.